(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7(6).]

# பாராளுமன்றம்

## 7ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 சனவரி 11 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2013 சனவரி 22, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2012 ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதிய 1782/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.01.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

ஹங்குரான்கெத மாதன்வல ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2013 பெப்புருவரி 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1850/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 5 வருடங்களின்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் 10 பாரிய அளவிலான செலவு அதிகரிப்புகளை துறைமுக மற்றும் வருட வாரியாகவும்;

(ii) மேற்படி (i) இனைத் தீர்மானிப்பதற்கு சகல பகுதிகளையும் ஒன்றுசேர்ப்பதன் கூட்டுவிளைவையும்;

(iii) செலவு அதிகரிப்பு விகிதாசாரத்திற்கேற்ப வருமான அதிகரிப்பு காணப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல், இக்குறைபாடு எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த 6 வருடங்களில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர் ஒருவருக்கான வருமானம், செலவு, இலாபம் மற்றும் சேர்பெறுமதி ஆகியவற்றை வருடவாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1894/ '11

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குருநாகல் மாவட்டத்தின் பன்னல பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற மாகந்துர நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பசுமை நகரமொன்றையும் பசுமை விளையாட்டுத் தொகுதியொன்றையும் நிர்மாணிக்கின்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போது இவற்றின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதன் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்காக நிதி வழங்கிய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாதென்பதையும்;

(iii) இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பசுமை நகரத்தினதும் பசுமை விளையாட்டுத் தொகுதியினதும் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2139/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊடகவியலாளர் திரு. பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன திகதி யாதென்பதையும்;

(ii) இவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்பதையும்;

(iii) சித்திரவாதைக்கு எதிரான சர்வதேச குழுவின் முன்னால் இலங்கை அரசு சார்பாக ஆஜராகிய திரு. மொஹான் பீரிஸ் திரு. பிரகீத் எக்னெலிகொட உயிருடன் உள்ளார் எனக் கூறியுள்ளாரா என்பதையும்;

(iv) அவர் அவ்வாறு கூறியிருந்தால் அவர் இருக்கின்ற நாடு அல்லது பிரதேசம் தொடர்பாக குறிப்பிடுவாரா என்பதையும்

(v) இவர் வெளிநாட்டுக்குச் சென்றிருப்பாராயின் இந்நாட்டுக்கு வரவழைத்துக் கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி குழுவின் முன்னால் திரு. மொஹான் பீரிஸ் மேற்கொண்ட கூற்று தவறானதெனில் நாட்டின் உன்னதமான நிறுவனமொன்றில் உன்னதமான பதவியை வகித்த ஒருவர் இவ்வாறு போலியான தகவல்களை சர்வதேசத்திற்கு வழங்கி நாட்டுக்கு ஏற்படுத்திய பாரதூரமான கலங்கம் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைக்காக யாதென்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2210 / '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு,பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மஹிந்த சிந்தனை, இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைகளில் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தின்படி, குறை வருமானம் பெறுவோருக்கான நகர குடியேற்றக் கருத்திட்டத்தின் கீழ் வீடமைப்பதற்காக வழங்கப்பட்ட 2 பர்சஸ் காணித் துண்டுக்கான முழுமையான உரிமையை அக்காணிகளில் தற்போது வசிப்பவர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தற்போது 2 பர்சஸ் காணிக்கான முழுமையான உரிமை கிடைக்கப்பெற்றுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2531/ '12

கௌரவ அனுர திஸாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் மருத்துவப் பீடங்களின் சிகிச்சை பயிற்சிக்கான பேராசிரியர் பிரிவுகளை (Professor unit) கொண்டுள்ள மருத்துவமனைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பேராசிரியர் பிரிவுக்கும் 2012 மார்ச் மாதம் 31 ஆம் திகதியளவில் இணைக்கப்பட்டிருந்த பேராசிரியர்கள், நிபுணத்துவ மருத்துவர்கள், பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் மருத்துவர்கள் (Senior Registrar மற்றும் Registrar), சிரேஷ்ட மருத்துவ உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பேராசிரியர் பிரிவுகளினதும் அலுவல்களுக்காக காணப்படும் சத்திரசிகிச்சை கூடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ரஜரட்ட மருத்துவ பீடத்தின் சிகிச்சைப் பயிற்சிக்கான அனுராதபுரம் பெரியாஸ்பத்திரியின் பேராசிரியர் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி பேராசிரியர் பிரிவில் பயிற்சி பெறும் மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அங்கு பயிற்சி பெறும் மருத்துவ மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு போதுமான மருத்துவர்கள், சத்திர சிகிச்சைக் கூடங்கள், வாட்டுகள் மற்றும் அவற்றை கொண்டு நடாத்துவதற்கு தேவையான பணியாட்டொகுதியினர் மற்றும் உபகரணங்கள் உள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2548/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2009 இலிருந்து இற்றைவரை இலங்கைப் பொலீசுக்குக் கிடைத்துள்ள வன்புணர்ச்சி, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளில் தற்போது விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2849/ '12

கௌரவ வசந்த அலுவிஹாரே,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நுவரெலியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உரித்தான இரண்டு மாடிக் கட்டடமொன்றை குத்தகைக்கு வழங்குவதற்காக 2011 டிசெம்பர் 19 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கள் யாவை என்பதையும்;

(iii) அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய கேள்விப் பத்திரங்கள் கோரலின் போது கவனத்தில் கொள்ளப்படுகின்றதும் முன்னுரிமை வழங்கப்படுகின்றதுமான விடயங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி கட்டடத்தை,

(i) பெற்றுக் கொள்வதற்கு ரூபா 320,000/- மற்றும் ரூபா. 355,000/- என்றவகையில் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பதையும்;

(ii) கேள்விப் பத்திர விண்ணப்பத்தையேனும் சமர்ப்பிக்காத ஒருவருக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) குத்தகைக்கு வழங்குவதில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(iv) முறைகேடான முறையில் வழங்கியதன் காரணமாக விண்ணப்பதாரர்களுக்கு அநீதியும், குறித்த கூட்டுறவுச் சங்கத்திற்கு நட்டமும் ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) உச்சளவான கேள்விப் பத்திரத்துக்கு கட்டடம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது கட்டடம் வழங்கப்பட்டுள்ளவரிடமிருந்து கூட்டுறவுச் சங்கம் பெற்றுக் கொள்கின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி, முறைகேடு தொடர்பாக முறையான விசாரணையை நடாத்தி கேள்விப் பத்திரதாரர்களுக்கு நீதியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கு காலம் எவ்வளவு எடுக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1895/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டிய கல்வி வலயத்திற்குரியதாயிருந்த யாய காமினீ கனிஷ்ட வித்தியாலயம் மூடப்பட்டு பல வருடங்கள் ஆகின்றனவென்பதையும்;

(ii) இந்த வித்தியாலயத்திற்குச் சொந்தமாகவிருந்த சில கட்டிடங்கள் தற்போது அழிவுற்று வருகின்றனவென்பதையும்;

(iii) இந்த வித்தியாலயத்திற்குச் சொந்தமாக சுமார் ஏழு ஏக்கர் நிலப்பரப்பு உள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) யாய காமினீ கனிஷ்ட வித்தியாலயத்திற்குச் சொந்தமாகவுள்ள கட்டிடங்கள் மற்றும் நிலப்பரப்பு என்பவற்றை அழிவுற இடமளிப்பது பெரும் தவறாகும் என்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலயத்திற்குச் சொந்தமான வளங்களைப் பயன்படுத்தி கைத்தொழிற்சாலையொன்றை ஆரம்பித்து பிரதேசவாழ் மக்களின் தொழில் பிரச்சினைக்கு தீர்வு வழங்க முடியுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) ஆமெனில், மேற்படி பாடசாலையின் வளங்களை மேலே முன்மொழியப்பட்டவாறு பயன்படுத்துவதற்கு திட்டமிடுவாரா என்பதையும்;

(ii) இன்றேல், பயனுள்ள வேறு நடவடிக்கைக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1935/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் யூலை மாதம் வரை தரக்குறைவான பெற்றோல் மற்றும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகளை இலங்கைக்கு விநியோகித்தவர் அல்லது விநியோகித்தவர்களையும்;

(ii) இந்த முறைகேட்டிலிருந்து அமைச்சு எவ்வாறு தவிர்க்கப்பட்டது என்பதையும்;

(iii) தரக்குறைவான பெற்றோல் உபயோகத்தால் பாதிப்புக்குள்ளான நுகர்வோரின் எண்ணிக்கையையும்;

(iv) தரக்குறைவான பெற்றோல் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொண்ட வாடிக்கையாளரின் பெயர்களையும்;

(v) பாதிப்படைந்த ஒவ்வொரு நுகர்வோருக்கும் வழங்கிய நட்டஈட்டை வெவ்வேறாகவும்;

(vi) தரம் குறைந்த பெற்றோல் காரணமாக இயந்திரங்கள் பழுதடைந்த எரிபொருள் நிலையங்களின் எண்ணிக்கையையும்;

(vii) அவ்வாறான எரிபொருள் நிலையங்களுக்கு எவ்வாறு நட்டஈடுகள் வழங்கப்படுகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) தரக்குறைவான பெற்றோல் சூழ்ச்சித் திட்டத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவந்த தரப்பினருக்கு கவர்ச்சிகரமான மிகையூதியமொன்று வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2148/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய லொத்தர் சபைக்கு 2005ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை ஆட்சேர்க்கப்பட்டுள்ள பதவியணியினரின் எண்ணிக்கை வருட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியினர் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது அங்கு நிலவுகின்ற ஊழியர் மிகை அல்லது ஊழியர் பற்றாக்குறை யாதென்பதையும்;

(iv) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை விஞ்சுகின்ற வகையில் ஆட்சேர்க்கப்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மிகையாக பணியாட்களை ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கிய அதிகாரியின் பெயர் மற்றும் பதவி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2223/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "செமட நிவசக்-ஹிதட செவனக்" வேலைத் திட்டத்தின் கீழ், கொழும்பு நகரில் குடிசைவாழ் மக்களின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 40,000 வீட்டுக்கூறுகளடங்கிய 20 மாடி வீட்டுத் திட்டங்கள் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்காக 500 கோடி ரூபாவை ஆரம்ப மூலதனமாக அடுத்து வரும் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் 500 கோடி ரூபா எந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது என்பதையும்;

(ii) குறித்த பணத்தைக் கொண்டு இன்றளவில் நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாடிவீட்டுத் திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மாடிவீட்டுத் திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள மாடிவீட்டுத் திட்டங்களில் இன்றளவில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1898/ '11

கௌரவ புத்திக பதிரண,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கடவான குளக்கட்டு புலிப் பயங்கரவாதிகளால் தகர்க்கப்பட்டு சுமார் இருபத்தாறு வருடங்கள் கடந்திருந்த போதிலும் இன்றுவரை இது திருத்தப்படாமையால் விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க முடியாதுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வாவியை மறுசீரமைப்பதில் உள்ள தடைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரச்சினைகளைத் தீர்த்து துரிதமாக வாவியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இதற்காக தற்போது நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2143/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹம்பாந்தோட்டையில் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்கு நிதியிடுவதற்கு அரசாங்கத்திற்கு நிதிகள் வழங்கிய தனியார்துறை நபர்களின் பெயர்களையும்;

(ii) இலங்கையில் மேற்கூறப்பட்ட விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு அவர்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு இங்கு வரவழைக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கைக்கான அவர்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டிற்குச் சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்;

(ii) சென்றவர்களின் பெயர்களையும்;

(iii) ஏற்பட்ட மொத்தச் செலவினத்தையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) 2011 நவெம்பர் மாதத்தில் புனித கிற்ஸ் இற்குச் சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்;

(ii) சென்ற நபர்களின் பெயர்களையும்;

(iii) மீள்வருகைப் பயணத்திற்கான மொத்தச் செலவினத்தையும்;

(iv) குறிப்பிடப்பட்ட பிரத்தியேக வாடகைக்கு அமர்த்திய விமானத்திற்கான செலவினத்தையும்;

(v) இலங்கை பொதுநலவாய விளையாட்டுப்போட்டிகளை நடாத்துவது தொடர்பில் வெற்றிபெறுவது நிச்சயம் என பெருமளவு நம்பிக்கையுடன் காணப்பட்ட பின்னர், அதனை எவ்வாறு இழந்தது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2149/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய லொத்தர் சபையினால் வரவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகளாக 2005 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை நிறுவனத்தின் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள பணத் தொகை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவுகளுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கு ஏற்புடைய ஆவணங்களை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரத்தை வழங்கிய நபர் அல்லது நபர்கள் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2224/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "செமட நிவசக்-ஹிதட செவனக்" வேலைத் திட்டத்தின் கீழ், குருநாகல், அனுராதாபுரம், கண்டி ஆகிய மாவட்டங்களில் வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கென்றே 15000 வீடுகளைக் கொண்ட மூன்று புதிய வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த வீடமைப்புக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நகரங்கள் யாவை என்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 பெப்புருவரி 06, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1525/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு தெற்குத் துறைமுகம் எப்போது பூர்த்தி செய்யப்படவுள்ளது என்பதையும்;

(ii) அது பூர்த்தியடைவதற்கு முடியுறுத்தப்படவுள்ள கட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) கொழும்பு தெற்கு துறைமுகத்தின் அலைதாங்கியின் நிர்மாணம் எப்போது பூர்த்தி செய்யப்படவுள்ளது என்பதையும்;

(ii) அலைதாங்கி நிர்மாணத்திற்கான செலவினங்கள் யாதென்பதையும்;

(iii) அலைதாங்கி நிர்மாணத்திற்கான செலவினைச் செலுத்துபவரையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) மேற்படி துறைமுகத்தின் இறங்கு துறைகளின் நிர்மாணம் எப்போது பூர்த்திசெய்யப்படவுள்ளது என்பதையும்;

(ii) அந்த இறங்கு துறைமுகங்களுக்கான நிதியிடல் மற்றும் நிர்மாணம் ஆகியவற்றிற்கென தனியார் கம்பனிகள் முன்வந்துள்ளனவா என்பதையும்;

(iii) அப்படியாயின், கம்பனிகளின் பெயர்களையும் அவற்றிற்கு வழங்கப்படவுள்ள சலுகைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1819/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திவுல பெலஸ்ஸ மகாவெலி கிராமத்தில் அமைக்கப்பட்ட குடி நீர் வழங்கும் திட்டம், நீர் கிடைக்காத காரணத்தால் கைவிடப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்நீர் வழங்கும் திட்டத்துக்கு செலவிடப்பட்ட தொகை யாது;

(ii) கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் நீர் பெறக்கூடிய சாத்தியத்தன்மை பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதா;

(iii) இச் சாத்தியக்கூறுக் கற்கை அறிக்கையின் பெறுபேறுகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) திவுல பெலஸ்ஸ மகாவெலி கிராமத்தில் நீர் திட்டத்தை நிர்மாணிக்கின்ற போது முறைகேடான நிதிக் கொடுக்கல்வாங்கல் நடைபெற்றுள்ளதென பிரதேச மக்கள் குறை கூறுகின்றனர் என்பதை அவர் அறிவாரா;

(ii) அவ்வாறாயின், இது தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணையை நடாத்த நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iii) மேற்படி நீர் திட்டத்தை துரிதமாக மறுசீரமைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) அவ்வாறாயின் அத் திகதி யாது;

(v) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2068/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பங்குச் சந்தையில் முதலீடு செய்துள்ள அரச நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு நிறுவனத்தினாலும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் முதலீடு செய்த சந்தர்ப்பத்தில் பங்கொன்றின் பெறுமதி யாதென்பதையும்;

(iv) இப்பொழுது மேற்படி ஒவ்வொரு பங்கினதும் பெறுமதி யாதென்பதையும்;

(v) பங்குகளில் முதலீடு செய்ததன் மூலம் மேற்படி நிறுவனங்கள் அடைந்த இலாபம் அல்லது நட்டம் யாதென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2230/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 – 2010ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் நாட்டினுள் மூடப்பட்ட அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) போதுமான வளங்கள் கிடைக்கப்பெறாமையே பாடசாலைகள் மூடப்பட்டமைக்கான பிரதானமான காரணம் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iii) இன்றேல், மேற்படி பாடசாலைகள் மூடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2532/ '12

கௌரவ அநுர திசாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010-2011 கல்வி ஆண்டுக்காக இலங்கையின் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் வெளிநாட்டு மாணவர்களை அனுமதிக்கும் சதவீதமானது 5% வரை அதிகரிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இந்த சதவீதத்துக்கமைய மேற்படி கல்வியாண்டுக்காக ஒவ்வொரு பீடத்திற்குமென வெளிநாட்டு மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட வாய்ப்புக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) தற்போது மேற்படி ஒவ்வொரு பீடத்திலும் அனுமதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) இதன் பிரகாரம், தற்போது குறித்த ஒவ்வொரு பீடத்திலும் வெளிநாட்டு மாணவர்களுக்காக காணப்படும் வெற்றிடங்கள் யாவை;

(v) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதில் பின்பற்றப்படும் வழிமுறைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010-2011 கல்வி ஆண்டிற்காக பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற வெளிநாட்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்கான நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் யாவை என்பதையும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2549/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பேலியக்கொடை மீன் விற்பனை நிலையத்தில் கப்பம் பெறும் சம்பவங்கள் தொடர்பாக இலங்கைப் பொலீஸுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளனவா என்பதையும்;

(ii) இம்முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இம்முறைப்பாடுகளின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2851/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி அடையாள அட்டையின் பின்புறத்தில் சுகாதார சேவைகள், வங்கிச் சேவைகள், பொலிஸ் மற்றும் சட்ட ஆலோசனைகள் , தபால், ஓய்வூதியம் மற்றும் அலுவலக நடவடிக்கைகள் போன்ற சேவைகளின்போது அடையாள அட்டையின் உரிமையாளருக்கு முன்னுரிமையளிக்கப்படுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி முன்னுரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்காக,

(i) அரசாங்கத்தினால் ஆக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஆகக் குறைந்தது அரசாங்க ஆஸ்பத்திரியொன்றின் மருத்துவர்களை சந்தித்தல், சிகிச்சை பெறுவதற்கு சமுகமளித்தல் மற்றும் மருந்துகளை பெற்றுக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளின்போது மூத்த பிரஜைகளுக்கு முன்னுரிமையளிப்பதற்காக சட்ட அதிகாரம் வழங்கப்படுகின்ற சுற்றறிக்கையொன்றை மற்றும்/அல்லது ஒழுங்கு விதியொன்றை கூடிய விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1531/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2006 முதல் இற்றை வரை,

(i) வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு சென்ற நபர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் மேற்கொண்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கையையும்,

(ii) வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக சென்ற நபர்களுக்காக வழங்கப்பட்ட காப்புறுதிக் காப்பீட்டின் மூலம் அரசாங்கம் திரட்டிய வருமானத்தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக செல்லும் தொழிலாளர்களுக்கு காப்புறுதிக் காப்பீடுகளை வழங்குவதற்கு தகைமையுடைய கம்பனிகளையும்,

(ii) மேற்படி கம்பனிகள் முறையான கேள்விப்பத்திர நடைமுறைகளினூடாக தெரிவுசெய்யப்பட்டனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1821/ '11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ மற்றும் கண்டி நகரத்தை இணைக்கும் ஹல்ஒலுவ, தொடம்வல சங்கிலிப் பாலத்துக்குப் பதிலாக நிரந்தர பாலமொன்றை அமைப்பதற்கு பல தடவைகள் அடிக்கல் வைக்கப்பட்ட போதிலும் இதுவரை இப்பாலம் அமைக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மக்களின் போக்குவரத்து வசதிக்காக குறிப்பிட்ட இடத்தில் புதிய பாலமொன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) இதுவரை இதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(iv) இப்பாலத்தை நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2069/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்டபதற்கு,— (2)

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கொழும்பு பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்துள்ள,

(i) வெளிநாட்டு நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனமும் முதலீடு செய்துள்ள பணத்தொகை யாது;

(ii) மேற்படி முதலீடுகளில் தற்போது தமது முதலீட்டினை நீக்கிக்கொண்டுள்ள நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி முதலீடுகள் நீக்கிக்கொள்ளப்பட்ட திகதிகள் யாவை;

(iv) மேற்படி முதலீடுகளை நீக்கிக்கொண்டமைக்கான காரணங்கள் காட்டப்பட்டுள்ளனவா;

(v) ஆமெனில், அக்காரணங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2256/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மாகாணத்தில் தொழிலின்மை வீதம் யாது;

(ii) இந்த மாகாணத்தின் தொழிலின்மையைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) மேற்படி நடவடிக்கைகளை குறிப்பிட்ட காலகட்டங்கள், இலக்குகளுடன் கூடியதாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1544/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

( அ) (i) இலங்கையில் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அதி சொகுசு லிமோசின் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு ஏன் அனுமதியளிக்கப்பட்டது என்பதையும்;

(ii) இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள லிமோசின் வாகனங்களின் எண்ணிக்கையையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட லிமௌசின் வாகனமொன்றின் பெறுமதியையும்;

(iv) லிமௌசின் வாகனமொன்றை விடுவித்துக்கொள்ள செலுத்திய சுங்கத்தீர்வை மற்றும் ஏனைய வரிகளையும்;

(v) வாகனங்களை விடுவித்துக்கொண்ட நபர்களின் பெயர்கள் மற்றும் அவற்றை விடுவித்துக்கொண்ட திகதி ஆகியவற்றையும்;

(vi) மேற்படி வாகனம் சொகுசு வாகனமென வகைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 1000சீ.சீ. இற்கும் குறைவான இயந்திரக் கொள்ளளவைக் கொண்ட முச்சக்கர வண்டிகள் மற்றும் ஏனைய வாகனங்களுக்கும், 1000 முதல் 2000சீ.சீ. இயந்திரக் கொள்ளவைக் கொண்ட வாகனங்களுக்குமான இறக்குமதித் தீர்வையையும்;

(ii) இறக்குமதியின் போது ஏனைய சொகுசு வாகனங்களுக்குப் பிரயோகிக்கத்தக்க தீர்வைகளையும்;

(iii) மேற்படி (ஆ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களுக்குப் பிரயோகிக்கத்தக்க தீர்வைகள் சொகுசு லிமௌசின் வாகனங்களுக்கும் பிரயோகிக்கப்பட்டிருக்க வேண்டுமாவென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1822/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பெருந்தொகையான மக்கள் சேவையைப் பெற்றுக்கொள்ளும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் முல்கிரிகல வலஸ்முல்ல யஹல்முல்ல குடும்ப சுகாதார சேவை நிலையக் கட்டிடம் தற்பொழுது இடிந்து விழும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், இக்கட்டிடத்தை துரிதமாக மறுசீரமைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) இதுவரை இதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(iii) அப் பணத் தொகை எவ்வளவு;

(iv) மேற்படி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2121/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு குத்தகை அடிப்படையில் வாகனங்கள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வாகனங்கள் எப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி வாகனங்களை வழங்கிய குத்தகை நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி வாகனங்களைப் பெற்றுக்கொண்ட ஆண்டுகள் யாவை என்பதையும்;

(vi) தற்போது இந்த வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருப்பின், விடுவிக்கப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2257/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் தொழிலின்மை வீதம் யாது;

(ii) இந்த மாகாணத்தின் தொழிலின்மையைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) மேற்படி நடவடிக்கைகளை குறிப்பிட்ட காலகட்டங்கள், இலக்குகளுடன் கூடியதாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 பெப்புருவரி 07, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1747/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கம் கஸினோவை சாதாரண வியாபார நடைமுறையாக ஏற்றுக்கொள்கிறதா என்பதையும்;

(ii) இன்றேல், கஸினோ சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் சட்டமாக்கப்பட்டு வரிவிதிக்கப்பட்டது ஏன் என்பதையும்;

(iii) கஸினோ மூலம் நாட்டிற்குக் கிடைக்கப்பெற்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1893/ '11

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் கெக்கனதுர எல்லகந்த வாவியின் குளக்கட்டின் சில இடங்களிலிருந்து நீர் கசிவதற்கு ஆரம்பித்துள்ளதால் அருகாமையில் அமைந்துள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதையும்;

(ii) வாவியை மறுசீரமைக்கும்போது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகளின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதென விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர் என்பதையும்;

(iii) பிரதேச மக்கள் இந்த நிலைமை தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்திருந்த போதிலும் இதுவரை அதற்கான தீர்வு கிடைக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கெக்கனதுர எல்லகந்த வாவியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின்போது ஏற்பட்டுள்ள முறைகேடுகள் தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணையை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) வாவியை மீண்டும் மறுசீரமைத்து நீர் கசிவினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்காக எடுக்கப்படும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2270/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டில் நத்தார் தினத்தன்றோ அல்லது அண்மித்த தினமொன்றிலோ தங்காலை பிரதேசத்தின் விடுமுறை விடுதியொன்றில் வெளிநாட்டவரொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், படுகொலைக்கு உள்ளானவரது பெயர் மற்றும் நாடு யாது என்பதையும்;

(iii) மேற்படி படுகொலைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி படுகொலைக்கான சந்தேக நபர்கள் இனங் காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(v) இவர்கள் வகிக்கும் பதவிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி படுகொலை சம்பந்தமாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி படுகொலை காரணமாக இலங்கைக்கு சர்வதேச ரீதியில் எதிர்நோக்க நேரிட்டுள்ள நிலைமை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2331/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பௌத்த தர்மத்தைக் கற்பிக்க அவசியமான ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பௌத்த சமயத்தைக் கற்பிக்க பௌத்த தர்மாசார்ய பரீட்சையில் சித்தியடைந்தவர்களை ஆசிரியர் சேவைக்கு சேர்த்துக்கொள்ளல் சம்பந்தமாக අමප/10/2376/436/052 இலக்கத்தின் கீழ் 2010 ஒற்றோபர் 28 ஆந் திகதி அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது பௌத்த தர்மாசார்ய பரீட்சையில் சித்தியடைந்துள்ளோர் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அரசாங்க ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறைக்கு அமைவாக பௌத்த சமயத்தைக் கற்பிக்கும் பொருட்டு பௌத்த தர்மாசார்ய பரீட்சையில் சித்தியடைந்தோரைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்சேர்ப்பினை எவ்வளவு காலத்திற்குள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2524/ '12

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011ஆம் ஆண்டில் முதலாம் ஆண்டுக்கு பாடசாலைப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளல், பாடப் புத்தகங்களைப் பகிர்ந்தளித்தல், சீருடைகளைப் பகிர்ந்தளித்தல், 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் நிறைவான பாடசாலைகள் கருத்திட்டத்தை ஆரம்பித்தல் ஆகிய விடயங்களுடன் தொடர்பான ஒவ்வொரு தேசிய விழாவும்,

(i) நடத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) நடத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

(iii) நடத்த செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட சகல தேசிய விழாக்களையும் நடத்த செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்தப் பணம் எவ்வாறு பெறப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2546/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை இலங்கை இராணுவத்திற்கு, விமானப் படைக்கு மற்றும் கடற்படைக்கு உணவு வழங்கலை மேற்கொள்கின்ற ஆட்களும் நிறுவனங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஆட்களையும் நிறுவனங்களையும் தெரிவு செய்கையில் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்காக கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த ஆட்களும் நிறுவனங்களும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த விலைகள் யாவையென்பதையும்;

(v) தெரிவுசெய்யப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் சமர்ப்பித்த விலைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2831/ '12

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள விதவைகள் பொருளாதார ரீதியாக உறுதித் தன்மையை அடைவதற்கு உதவும் வகையில் அரசாங்கத்தால் ஏதேனும் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், நடைமுறைப்படுத்தப்படும் அத்தகைய கொள்கைகள் யாவையென்பதையும்;

(iii) அத்தகைய பெண்களை சமூகத்துடன் மீண்டும் ஒருங்கிணைப்பதற்கு உதவும் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அது தொடர்பில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டம் யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1756/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இராணுவம் சாராத செயற்பாடுகளுக்கென பணிக்கமர்த்தப்பட்ட முப்படைகளைச் சேர்ந்த படை வீரர்களது எண்ணிக்கையையும்;

(ii) அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற இராணுவம் சாராத வேலைகளின் தன்மையையும்;

(iii) இராணுவம் சாராத வேலைகளை செய்வதற்காக அவர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறதா என்பதையும்;

(iv) ஆம் எனில், மேற்படி (iii) இன் பிரகாரம் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தொகையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) தனக்கு வழங்கப்பட்ட இராணுவம் சாராத வேலைகளை செய்ய முடியாமையின் காரணமாக ஆயுதப் படையிலிருந்து யாராவது பதவியிலிருந்து விலகியுள்ளனரா என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1899/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி மாவட்டத்தின் எல்பிட்டிய வலயக்கல்வி காரியாலத்திற்கு உரித்தாயிருந்த இம்புல்பிட்டிய, கா/ராமதொல கனிஷ்ட வித்தியாலயம் இற்றைக்கு சில வருடங்களுக்கு முன்னர் மூடப்பட்டமையினால் கட்டிடங்கள் உள்ளிட்ட ஏனைய வளங்கள் அழிவடைந்து வருகின்றன என்பதையும்;

(ii) தற்போது மேற்படி பாடசாலைக்கான நிலத்தை அயலவர்கள் கைப்பற்றக்கூடிய ஆபத்தான நிலைமை காணப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பலவந்தமாக பாடசாலைக் காணியை கைப்பற்றுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) கா/ராமதொல கனிஷ்ட வித்தியாலயத்திற்குச் சொந்தமான நிலத்தையும் கட்டிடங்களையும் பயனுள்ள வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில் அத்திட்டம் யாதென்பதையும்;

(iv) இதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2271/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டில் நத்தார் தினத்தன்று அல்லது அதற்கு அண்மித்த தினமொன்றில் தங்காலை பிரதேசத்தின் விடுமுறை விடுதியொன்றில் வெளிநாட்டவரொருவர் படுகொலை செய்யப்பட்டிருப்பின், அவ்விதம் படுகொலை செய்யப்பட்டவருடன் இருந்த ஏனைய வெளிநாட்டவரது பெயர் யாது என்பதையும்;

(ii) இவரது நாடு யாது என்பதையும்;

(iii) அந்நபர் ஒரு பெண் எனில் இவர் பாலியல் வல்லுறவுக்கு அல்லது தொந்தரவுக்கு இலக்காகியுள்ளாரா என்பதையும்;

(iv) தற்போது இவர் உயிருடன் இருக்கிறாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி சம்பவம் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட அபகீர்த்தியை இல்லாதொழிப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2333/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள மாற்றங்களுக்கு ஒத்ததாக 2006.01.01ஆம் திகதிக்கு முன்பு ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதிய முரண்பாட்டை நீக்குவதற்கும்;

(ii) சம்பள முரண்பாடுகளை நீக்குவது பற்றி கவனத்திற்கொள்வதற்காக பல சந்தர்ப்பங்களிலும் நியமிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கைகளிலுள்ள சிபாரிசுகளைக் கவனத்திற் கொண்டு இச்சம்பள முரண்பாடுகளை நீக்கும் பொது படிகளுக்குப் பதிலாக அதிகரிக்கும் பெறுமானங்களை திரட்டிய சம்பளத்துக்குச் சேர்ப்பதற்கும்

அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஆ) (i) 2004 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதியத்துக்கு 2012 வரவு செலவு அறிக்கை மூலம் போதியளவான கொடுப்பனவொன்று சேர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அரச ஊழியர்களுக்கு ஏதேனும் சம்பள மாற்றம் நடைபெறுமாயின் அதற்கேற்றவாறு அனைத்து ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் குறிப்பிட்ட அதிகரிப்பை வழங்கும் தேசியக் கொள்கையை பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

(iii) அவ்வாறாயின் அதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1757/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இராணுவத்துடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முன்னாள் இராணுவ உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையையும்;

(ii) இது அனுமதிக்கக் கூடியதாவென்பதையும்;

(iii) இராணுவத்துடன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள 20 கம்பனிகளின் பெயர்களை அவற்றின் பணிப்பாளர்களின் பெயர்களுடனும்;

(iv) 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011ஆகிய ஆண்டுகளுக்கான ஒவ்வொரு கம்பனியினதும் வர்த்தகப் பெறுமதியை தனித்தனியாகவும்;

(v) மேற்படி கம்பனிகள் இராணுவத்திடமிருந்து வியாபார வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் போது கேள்விப்பத்திர அனுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதையும்;

(vi) இன்றேல், ஏன் அவ்வாறு நடைபெறுகின்றதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1938/ '11

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாணத்தில் பின்தங்கிய பாடசாலைகளில் பல வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரிந்த 780 பேர் 2007 ஆம் ஆண்டில் ஆசிரிய உதவியாளர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதையும்;

(ii) சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் இன்று வரை மேற்படி ஆசிரிய உதவியாளர் ஒருவருக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவு மாத்திரமே செலுத்தப்படுகின்றது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஆசிரிய உதவியாளர்களுக்கு தற்போது செலுத்தப்படும் கொடுப்பனவை அதிகரித்து அவர்களை ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2273/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சை நடைபெற்ற திகதி யாதென்பதையும்;

(ii) இப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) வெளியிடப்பட்ட பெறுபேறுகளை செல்லுபடியற்றதாக்கிவிட்டு மீண்டும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 உயர் தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்படுகையில் ஏற்பட்ட சிக்கலான நிலைமைக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(ii) இவர்கள் தொடர்பாக மேற்கொள்ளவிருக்கும் அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) பெறுபேறுகள் திருத்தப்பட்டதனால் எதிர்பார்ப்புகள் நிறைவேறாது அசௌகரியத்துக்கு உள்ளான தரப்பினர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2335/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) "மகிந்த சிந்தனை எதிர்கால தொலைநோக்கு" தேசிய கொள்கைத் திட்டத்தின் கீழ் தாதியர் சேவைக்கான தேசியக் கொள்கையொன்றை தயாரிப்பதற்காக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) தற்போது மேற்படி தேசிய கொள்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2013 பெப்புருவரி 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1944/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் முலட்டியன வலய கல்வி அலுவலகத்தினால் நிருவாகிக்ககப்படும் மார/ தெய்யந்தர ஆரம்ப பாடசாலையை தற்போது இருக்கும் இடத்தில் இருந்து வேறொரு இடத்துக்கு எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், பாடசாலை புதிதாக நிறுவப்படவுள்ள இடம் எது என்பதையும்;

(iii) அதற்காக திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், புதிய பாடசாலையின் நிர்மாணப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2183/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் காணி உரித்துரிமையளிக்கும் பிரிவு தற்போதைய உரித்துப் பதிவுச் சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதை இனங்கண்டுள்ளது என்பதையும்;

(ii) இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் மேற்படி சட்டத்தை திருத்துவதற்கான பரிந்துரை செய்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி (அ)(i) மற்றும் (ஆ)(ii) இன் பிரகாரம் உரித்துப் பதிவுச் சட்டத்தில் இனங்காணப்பட்ட குறைபாடுகளையும் பிரேரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளையும் வெவ்வேறாக அவர் கூறுவாரா?

(இ) பாராளுமன்றத்தின் மூலமாக அவ்வாறான திருத்தங்களை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) (i) இச்சட்டத்தில் பல குறைபாடுகள் இருந்தும், காணி, காணி அபிவிருத்தி அமைச்சு 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தை முனைப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றது என்பதையும்;

(ii) இனங்காணப்பட்ட குறைபாடுகளைத் திருத்தாமல் 105 புதிய பிரிவுகளை மேற்படி சட்டத்தில் கூட்டிணைப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சு முயற்சிக்கின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

2277/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் உள்ள எவ்விதமான வருமானத்துக்கும் உரிமைகோராத, ஊனமுற்ற நபர்கள் மற்றும் வயோதிபர்களைக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

(ii) 2005 மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள " எவ்வித வருமானத்துக்கும் உரிமைகோராத ஊனமுற்றவர்களைக்கொண்ட குடும்பமொன்றுக்கு மாதந்தம் ரூ. 3,000 பெற்றுக்கொடுப்பேன்" எனும் வாக்குறுதியின் படி தற்போது மேற்படி பணம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில்,மேற்படி பிரதிபலனைப் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை மேற்படி பணத்தை வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி (அ)(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதி தற்போது நிறைவேற்றப் படுவதில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2336/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு" கொள்கைத்திட்டத்தின் கீழ் புற்றுநோய் போன்ற தொற்றாத நோய்களை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கான விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்கும் அது சம்பந்தமான செயற்பாட்டுத் திட்டமொன்றை சமர்ப்பிப்பதற்கும் கல்விமான்களைக் கொண்ட சுயாதீனமான செயலணியொன்றை அமைப்பதற்கும் ஆறு மாதங்களினுள் சம்பந்தப்பட்ட விடயங்களை பூர்த்தி செய்வதற்கும் உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி செயலணியில் உள்ளடங்கியுள்ள கல்விமான்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இதன் மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2536/ '12

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும், புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ஆம் ஆண்டில்,

(i) மஹபொல புலமைப் பரிசில் நிதியைப் பெற்றுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை பல்கலைக்கழக வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹபொல புலமைப் பரிசில் பெற்றுக் கொடுப்பதற்காக செலவிடப்படுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மஹபொல புலமைப் பரிசில் தவணைத் தொகையைச் செலுத்துவதற்காக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பல்கலைக்கழக மாணவர்களின் மஹபொல புலமைப் பரிசில் தவணைத் தொகை இறுதியாக அதிகரிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) அச்சந்தர்ப்பத்தில் தவணைத் தொகையாக அதிகரிக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போதைய மஹபொல புலமைப் பரிசில் தவணைத் தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2830/ '12

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் மருத்துவக் கையுறைகளின் வழங்குநர்களைத் தெரிவுசெய்யும் முறை யாதென்பதையும்;

(ii) மருத்துவக் கையுறைகளைக் கொள்வனவு செய்யத் தீர்மானம் மேற்கொள்ளும் நபர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(iii) வழங்கல் திகதி, வழங்கல் காலப்பகுதி மற்றும் ஒப்புக்கொண்ட காலத்தினுள் வழங்க முடியாமை என்பன தொடர்பாக வழங்கல் ஒப்பந்தத்திலுள்ள நியம வாசகங்கள் யாவையென்பதையும்;

(iv) 2008, 2009, 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் மருத்துவக் கையுறைகளின் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்ட தொகைகள் மற்றும் செலவு செய்யப்பட்ட தொகைகள் போன்றன தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முதற்கட்ட விசாரணையில் மருத்துவக் கையுறைகளின் கொள்வனவு தொடர்பாக முறைகேடொன்று வெளிக்கொணரப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இம்முறைகேடு மேலதிக விசாரணைக்காக நிதி, திட்டமிடல் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட முறைகேட்டின் தன்மை யாதென்பதையும்;

(ii) முறைகேட்டினால் ஏற்பட்ட பண நஷ்டத்தையும்;

(iii) விசாரணையானது ஆ(ii) இன் படி நடைபெற்றிருப்பின், அதன் விளைவுகளையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2883/ '12

கௌரவ மனுஷ நாணாயக்கார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2012 ஆம் ஆண்டில் காலி கல்வி வலயத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில்,

(i) முதலாம் தரம் முதல் பதின்மூன்றாம் தரம் வரையிலான வகுப்புகளில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வகுப்பின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) முதலாம் தரத்திற்கு நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைத் தவிர, வேறு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iii) முதலாம் தரத்திற்கு அவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்கள் யாவர் என்பதையும்;

(iv) முதலாம் தரத்தைத் தவிர, வேறு தரங்களுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) ஏனைய தரங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்கள் யாவர் என்பதையும்

தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளுக்கு நேர்முகப் பரீட்சைகளில் சித்தியடைகின்ற மாணவர்களைத் தவிர, வேறு மாணவர்களை அனுமதிப்பதற்கு அதிகாரமளிக்கின்ற சட்டரீதியான ஆவணங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி ஆவணங்களை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1949/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தில் படல்கும்புர பிரதேச சபைக்குச் சொந்தமான நக்கல வாரச் சந்தை இற்றைக்கு சுமார் ஓராண்டுக்கு முன்னர் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது என்பதையும்;

(ii) பல்வேறு ஆட்களின் நிர்ப்பந்தங்கள் காரணமாக தற்போது வியாபாரிகளுக்கு அங்குவந்து வியாபாரம் செய்ய முடியாதுள்ளது என்பதையும்;

(iii) இதனால் வாரச் சந்தை பாழடைந்து காணப்படுகிறது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நக்கல வாரச்சந்தையில் நிலவுகின்ற இந்நிலைமையை தவிர்த்து வியாபாரிகளுக்கு சுதந்திரமாக வியாபாரத்தில் ஈடுபடுவதற்கும் பாதுகாப்பு தொடர்பில் இவர்களுக்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2278/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தேச களுகங்கை திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி திட்டத்தை ஆரம்பிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நீர்ப்பாசன திட்டத்தில் அடங்குகின்ற மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிலப்பரப்பிலுள்ள விவசாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த காணிகளின் அளவு மற்றும் பயிரிடப்பட்டுள்ள விவசாய பயிர்கள் யாவையென்பதையும்;

(v) இதில் உள்ளடங்குகின்ற கிராமங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி திட்டத்தினால் இடம்பெயர்கின்ற குடும்பங்கள் மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்;

(vii) இத்திட்டத்தின் கீழ் அகற்றுவதற்கு நேரிடுகின்ற அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள்,விஹாரைகள் மற்றும் ஏனைய முக்கியமான இடங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டம் சம்பந்தமாக பெறப்பட்டுள்ள சுற்றாடல் சாத்தியக்கூற்றறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி திட்டம் செயற்படுத்தப்படுவதால் இடம்பெயரும் மக்களுக்காகவும் அவர்கள் இழக்கின்ற சொத்துகளுக்காகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பொருளாதார ரீதியில் மிகவும் பெறுமதிமிக்க காணிகளை இழப்பதாலும் பெருமளவு மக்கள் இடம்பெயர்வதாலும் இத்திட்டத்தை நிறுத்துவதற்கோ அல்லது குறைந்த இழப்புகளுள்ள வேறு இடத்துக்கு எடுத்துச் செல்வதற்கோ நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2319/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பின்பற்றப்படுகின்ற சமயங்கள் யாவை என்பதையும்;

(ii) இலங்கையில் பௌத்தம், இந்து சமயம், கத்தோலிக்கம் மற்றும் இஸ்லாம் என ஒவ்வொரு சமயத்திற்கும் இருக்கின்ற தொன்மைமிக்க மூன்று வணக்கத்தலங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இவை ஒவ்வொன்றும் எப்போது கட்டப்பட்டன என்பதையும் அவை அமைந்துள்ள இடங்கள் எங்கே என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட வணக்கஸ்தலங்களை புனரமைப்பதற்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தின் அளவு யாதென்பதையும்;

(ii) இத்தலங்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2338/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு" கொள்கைத் திட்டத்தின் மூலம், கொழும்புக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ள நிபுணத்துவ ஆஸ்பத்திரிகள் இரண்டு வீதம் ஒவ்வொரு மாகாணத்திலும் தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) தற்போது மேற்படி ஆஸ்பத்திரிகளை தாபிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1963 / ‘11

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள சுமார் 200 ஆண்டுகள் பழமைவாய்ந்த உக்கல்பெவுல உடபீக்வெல்ல கங்காதிலக புராண விஹாரை தொல்பொருளியல் திணைக்களத்தினால் பேணிப்பாதுகாப்பதற்கு பெயரிடப்பட்டுள்ள ஒரு வணக்கஸ்தலம் என்பதையும்;

(ii) அதன் அனைத்து கட்டடங்களும் விஹாரையின் சுவரோவியங்களும் அழிவடைந்து வருகின்றதென்பதையும்;

(iii) மேற்படி விஹாரை அமைந்துள்ள நிலப்பகுதியும் மண்சரிவு ஏற்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதென்பதையும்;

(iv) ஆகையால் விஹரையின் அடிவாரத்தினூடாக அமைந்துள்ள மாத்தறை - வெல்லலாய வீதியினூடாக பயணிக்கின்ற மக்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) உக்கல்பெவுல உடபீக்வெல்ல கங்காதிலக விஹாரையின் சுவரோவியங்களையும் மேற்படி நிலப் பகுதியையும் பேணிப் பாதுகாப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2279/ ’12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிருவகிக்கப்படுகின்ற நாடளாவிய ரீதியலுள்ள நூலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நூலகங்களில் நூலக உதவியாளர் பதவியில் கருமமாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு வழங்கப்படுகின்ற மாதாந்த சம்பளம் அல்லது கொடுப்பனவுகள் யாதென்பதையும்;

(iv) அனுபவத்திற்கும் சேவைக்காலத்திற்கும் ஏற்ப அரச ஊழியர்களுக்கு உரித்துடைய பதவியுயர்வு வாய்ப்புகளும் ஓய்வூதிய உரித்துகளும் நூலக உதவியாளர் பதவிக்கும் உரித்துடையதாவென்பதையும்;

(v) மேற்படி பதவியுயர்வு வாய்ப்புகள் கிடைக்காவிடின் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அனுபவம் மற்றும் சேவைக்காலம் ஆகியவற்றிற்கேற்ப அரச சேவையில் பெரும்பாலானவர்களுக்கு உரித்துடைய பதவியுயர்வு வாய்ப்புகள் நூலக உதவியாளர்களுக்கு கிடைக்காமை பாரிய அநீதியென்பதுடன் மனித உரிமை மீறலாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களுக்கு இந்த உரிமை எத்தேதியில் பெற்றுக்கொடுக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2340/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு" கொள்கைத் தொடர் மூலமாக சுகாதார அமைச்சில் பெண் நோய் தடுப்பு தொடர்பான தனி வேறான பிரிவொன்றை ஆரம்பிக்க வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) தற்போது மேற்படி பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2463/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "வடக்கின் வசந்தம்" மற்றும் "கிழக்கின் உதயம்" ஆகியன தொடர்பாக 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) ஏற்பட்ட செலவு மற்றும் அடைந்த நன்மைகளையும்;

(ii) ஏற்படுத்தப்பட்ட தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கையையும்; மற்றும்

(iii) ஏற்பட்ட சரியான செலவையும் மற்றும் கசோட்டத்தினைக் கொண்டு செலவிடப்பட்ட முழுப் பணத்தொகைக்கான சான்றுகளையும்

ஆண்டு அடிப்படையில் வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான "வடக்கின் வசந்தம்" மற்றும் "கிழக்கின் உதயம்" ஆகியவற்றுக்காகப் பெறப்பட்ட மொத்த உதவிகளையும் கொடைகளையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.12/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடகவியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.13/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.14/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் தேர்தல் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.15/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.16/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.17/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.18/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ‘விசேட வழக்குத் தொடுநர்’ எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு “விசேட வழக்குத் தொடுநர்” எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு ஆகிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.31/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல், – பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 75/ '10

கௌரவ புத்திக பதிரண,— வீட்டிலிருந்து தொழில் புரிவோருக்கான தேசிய கொள்கையொன்றை வகுத்தல்,— இலங்கையில் பலதரப்பட்ட தொழில் வாய்ப்புத் துறைகளில் பல தரப்பட்ட உற்பத்திப் பணிகளில் ஈடுபடும் சுமார் பத்து இலட்சம் பேர்களான வீட்டிலிருந்து தொழில் புரிவோர்களுக்காக அரசியல் அதிகாரம் வாய்ந்தோர்கள், அதனுடன் தொடர்புபட்ட சகல துறைகளினதும் தேர்ச்சிபெற்றவர்கள் புத்தி ஜீவிகள் உட்பட அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று முறையான தேசிய கொள்கையொன்றை வகுத்து அதனை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/ '10

கௌரவ புத்திக பதிரண,— நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளமுடியாதுள்ள வயற்காணிகளை பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல்,— வயற் காணிகளை நிரப்புவதற்கான சட்டம் மீறப்படாத வகையில், ஒழுங்குமுறையான ஆய்வு ஒன்றின் மூலம் இனங்காணப்பட்டதன் பின்னர் எவ்வகையிலும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத வயற் காணிகளில் பயனுள்ள விவசாய உற்பத்திகளை மட்டும் பயிரிடுவதற்கும், நிர்மாணப் பணிகளுக்காக எவ்வித வாய்ப்புகளும் கிடைக்காத வகையிலுமான நிகழ்ச்சித் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 77/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாவட்ட மட்டத்தில் தகவல் மத்திய நிலையங்களை நிறுவுதல்,— புவியியல் அமைவு, வரலாற்றுப் பின்னணி, பயிரிடப்படும் பயிரினங்கள், வீதி முறைமை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் ஆகிய அனைத்து தகவல்களும் கணனிமயப்படுத்தப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தகவல் மத்திய நிலையங்களை நிறுவுவதற்கும், அதன் முதலாவது கட்டத்தின் போது மகாகாண மட்டத்திலும் இரண்டாவது கட்டத்தின் போது மாவட்ட மட்டத்திலும் மூன்றாவது கட்டத்தின் போது பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச மட்டத்திலும் இந்நிலையங்களை நிறுவவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/ '10

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை ஒழுங்கு முறைப்படுத்தல்,— இலங்கையில் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் பௌத்த அறநெறி பாசாலைகளில் காணப்படும் அறநெறி இறுதிப் பரீட்சை மற்றும் அறநெறி தர்மாசார்ய பரீட்சை மற்றும் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளில் நடாத்தப்படும் இவற்றுக்கு இணையான பரீட்சைகளின் சான்றிதழ்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குதலும், அறநெறிப் பாடசாலைக்கு தொடர்ச்சியான மனித வளங்களுடன் பௌதீக வளங்களையும் வழங்குவதன் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை வகுத்தலும் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ ’10

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ ’10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ ’10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ ’10

கௌரவ புத்திக பதிரண,— உள்ளுராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்த்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ ’10

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ ’10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ ’10

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ '10

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ '10

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ '10

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

கௌரவ புத்திக பத்திரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிகக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 105/ '10

கௌரவ புத்திக பத்திரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/'10

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/'10

கௌரவ புத்திக பத்திரண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/'10

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

கௌரவ புத்திக பத்திரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.123/ ’11

கௌரவ ருவன் ரணதுங்க, — பட்டதாரி கிராம உத்தியோகத்தர்களை கௌரவிப்பதற்கான ஒரு கொடுப்பனவைச் செலுத்துதல்,— அரசாங்க சேவையை கிராமிய மட்டத்தில் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக சேவையாற்றுகின்ற கிராம உத்தியோகத்தர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையின் பின்னர் போட்டிப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், தற்போது சேவையாற்றி வருகின்ற கிராம அலுவலர்களில் சுமார் 30 % முதல் 40 % வரையிலானோர் பட்டத் தகைமைகளைப் பெற்றுள்ளனராதலாலும், இதற்கென எவ்வித விசேட கவனமும் இதுவரை செலுத்தப்படாதுள்ளதனாலும், பட்டத் தகைமையை கௌரவிக்கு முகமாக பட்டதாரி கிராம அலுவலர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.124/ ’11

கௌரவ ருவன் ரணதுங்க,- கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்தல்,- தினசரி பத்திரிகைகள் மற்றும் வார சஞசிகைகளில் புத்தர் பெருமானின் உருவப் படங்களும் சிலைகளின் படங்களும் எதுவித கட்டுப்பாடுமின்றி எல்லையற்ற வகையில் அச்சிடப்படுவதோடு அந்த அட்டைகள் பல்வேறுபட்ட பொருட்ளின் உறைகளாகவும் வேறு பொருத்தமற்ற அலுவல்களுக்காகவும் பயன்படுத்தப்படுவது புத்தர் பெருமானுக்குச் செய்கின்ற அவமரியாதையாகுமென்பதால் 2600 ஆம் புத்தர் ஜெயந்தி கொண்டாட்டத்தையும் கருத்திற்கொண்டு இதன் பின்னர் கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்வதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.127/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு மீள் பெயரிடுதல்,— இலவசக் கல்வியின் தந்தை காலஞ்சென்ற கௌரவ (கலாநிதி) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு அவரின் பெயரை சூட்டவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.129/11

கௌரவ அஜித் குமார,— காலி மாவட்டத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய ஆய்வு நூலொன்றைத் தயாரித்தல்,— காலி மாவட்டத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, தொல்பொருளியல் மற்றும் கலாசார ரீதியில் பெறுமதி வாய்ந்த இடங்கள் பற்றிய பரந்த ஆய்வினை மேற்கொண்டு, அது தொடர்பில் அறிவியல் பெறுமதிமிக்க ஆய்வு நூலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.130/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரி குழுவொன்றை நியமித்தல்,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.131/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய நிதியங்களிலிருந்து பணம் உடனடியாக செலுத்துதல்,— ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியனவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்ற சகல அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் செயல்படுநிலைத் தொழிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாத காலத்தின் பின்னர் அவர்களுக்கான நிலுவைகள் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.132/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச ஊடகங்களில் பக்கச் சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்தல்,— அரச ஊடகங்கள் இலங்கைப் பிரசைகளின் விசேட உரிமையாக இருப்பதாலும், அரச ஊடகங்கள் தொடர்ச்சியாக அரசியல்மயப்பட்டு இருப்பதாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் அரச ஊடகங்களில் சமமாக நடதப்பட்டு சம வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.133/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச சேவையில் மொழித் தேர்ச்சியின் தேவைப்பாடுகள்,— 2025 ஆம் ஆண்டளவில் சகல அரச சேவை ஊழியர்களும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கருமங்களை ஆற்றக் கூடியவர்களாகவும் கடிதப் பரிமாற்றல் மூலம் பணியாற்றுவதற்கும் பேசுவதற்கும் இயலுமையுடையவர்களாக இருப்பதை அரசாங்கம் கட்டாயமாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.134/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டினை வழங்குதல்,— இப்பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1%ற்கு சமமாகின்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு வருடாந்த அடிப்படையில் உரித்துடையவர்களாகவேண்டுமென்றும் மேலும் இந்த ஒதுக்கீடானது 50% மூலதனச் செலவின்மீது பயன்படுத்தப்படல் வேண்டுமென்றும் எஞ்சியுள்ளவை தனது வாக்காளர்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விரும்புகின்றதும் அரசாங்கத்தின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டதுமான எவ்வடிப்படையிலும் செலவழிக்கப்படலாமென்றும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.138 / 11

கௌரவ புத்திக பத்திரன,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.139/'11

கௌரவ புத்திக பத்திரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.140/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தெங்குக் கமத்தொழில், தெங்கு சார் வளங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தியையும் மேம்பாட்டையும் ஒழுங்கமைத்தல்,— வர்த்தக ரீதியான உற்பத்திகளில் தென்னை முக்கிய இடத்தை வகிப்பதால், வளங்களையும், சுற்றாடலையும் நிலைத்து நிற்கச் செய்கின்ற அதேவேளை, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறிப்பிடக்கூடியளவு பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தில் வளர்ச்சியடையும் அபிவிருத்தியை ஒழுங்கமைத்து தென்னைக் கைத்தொழில் மற்றும் தென்னை சார் வளங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அர்த்த புஷ்டியுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.141/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கித்துள் கைத்தொழிலை மேம்படுத்து முகமாக கித்துள் பயிர்ச்செய்கையை அதிகரித்தல்,— கிராமிய பிரதேசங்களில் கித்துள் பாரியளவு பங்களிப்பை வழங்குவதால், கிராமியக் கைத்தொழிலுக்கும் கிராமிய மக்களுக்கும் ஊக்கமளித்து தாவர உணவிற்காக வளர்க்கப்படும் கித்துள் மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்னும் எமது குறிக்கோள் திட்டத்திற்கு அமைவாக புதிய கித்துள் பயிர்ச்செய்கைகளை அதிகரிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.142/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்தல்,— 2020 ஆம் ஆண்டளவில் ஸ்திரத்தன்மை மிக்க தேசிய அபிவிருத்திக்காகவும் இலங்கை மக்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவற்றின் நலனுக்காகவும் இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.143/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மற்றும் அதனோடு தொடர்புடைய உற்பத்திகளின் பதனிடல், சந்தைப்படுத்தல் மற்றும் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்கான உதவிகளை நல்கி அதன்மூலம் தரமான பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகையை உற்பத்திகளின் முன்னணி ஏற்றுமதி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக இலங்கையை திகழச் செய்வதற்கு உதவக்கூடிய விதத்தில் மரமுந்திரிகைச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.144/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாரம்பரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்,— அம்பாறை மாவட்டத்தில் அருகி வரும் பாரம்பரிய கைத்தொழில்களான கைத்தறித் தொழில், மட்பாண்டம் தயாரித்தல், பனை ஓலை மற்றும் பன்கொண்டு பெட்டி, தண்டு மற்றும் பாய் போன்றவற்றை இழைத்தல், தும்புத் தொழில், பிரம்புத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.146/11

கௌரவ திலங்க சுமதிபால,— ஆயுத விற்பனைக்கான முறைசார்ந்த கட்டுப்பாட்டு முறையொன்றைத் தாபித்தல்,— சர்வதேச ரீதியில் எவ்வித கட்டுப்பாடுமின்றி ஆயுத விற்பனை நடைமுறையிலுள்ளதன் விளைவாக இலங்கை போன்ற நாடுகளுக்கு ஆயுதங்கள் வந்து குவிதல் மற்றும் அவ்வாறான நாடுகளில் இடம்பெறும் முறைசாராத ஆயுதச் சுற்றோட்டமானது சமூகத்தின் சுதந்திரத்திற்கு பாரிய தடையாகவும் சனநாயக ரீதியில் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கத்திற்கு அச்சுறுத்தலாகவும் தாக்கம் ஏற்படுத்துவதாகும், அத்துடன் நாட்டில் போதைப்பொருள் மற்றும் விபச்சாரத் தொழில் போன்ற சட்டவிரோதச் செயல்கள் விரிவடைவதற்கு காரணமாகவும் அமைந்துள்ளது. மேற்படி நிலைமைகளைத் தடுத்து ஒழுக்கம் பேணுகின்ற, சட்டத்தை மதிக்கின்ற, விழுமியங்கள் நிறைந்த சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புதல் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் எதிர்பார்ப்பாக உள்ளதாலும், ஆயுத விற்பனை உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதனூடாக சமூக போராட்டங்களைக் குறைத்து சமூக நலனோம்புகையை உறுதி செய்தல் இன்றைய உலகின் எதிர்பார்ப்பாகவுள்ளதாலும், மேற்குறிப்பிட்ட துர்நடத்தைகளை ஒழிப்பதற்காக சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்களுக்கு ஏற்புடையதாக தேசிய சட்ட முறைமையொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.147/11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,– பேரிச்சம் பழச் செய்கையை அறிமுகப் படுத்துவற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல்,– மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்ட பீனிக்ஸ் டெக்லிபெரா *(Phoenix dactylifera)* என்ற பேரிச்சம் பழச் செய்கை வெற்றியளித்துள்ளதால், எமது சொந்த மண்ணில் வளர்ந்த நற்சுவைமிக்க இப் பழத்தை சுவைப்பதற்கான வாய்ப்புகள் எமது நாட்டு மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறு இப் பேரிச்சம் பழச் செய்கையை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

பா.151/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வானோலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— வானொலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.152/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.153/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மாநகர சபைகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவை அறிமுகம் செய்தல்,— 2013 சனவரி 1 ஆம் திகதியளவில் சகல மாநகர சபைகளிலும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவைத் தாபிப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.154/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— உரிமைகள் பிரகடனச் சட்டமூலத்தைச் சட்டமாக்குதல்,— தென்னாபிரிக்காவில் மனித கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஜனநாயக விழுமியங்களை உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தின் ஆதாரமாகத் திகழ்கின்ற உரிமைகள் பிரகடனச் சட்டத்தை அடியொற்றி, சட்டமூலத்தில் விதித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக அரசினால் மதித்து, பாதுகாத்து, மேம்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேண்டிய நாட்டின் எல்லா மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டமூலம் இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.155/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட படிகள் கொடுப்பனவு,— அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படாதவிடத்து அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் எந்த வகையான விசேட படிகளும் வழங்கப்படக் கூடாது என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.158/ ’12

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்,— இலங்கை புவியியல் ரீதியாக மையப் பகுதியில் நன்கு அமையப்பட்டிருப்பதாக அறியப்பட்டிருந்ததாலும், பண்டைக் காலங்களிலிருந்த கடற்போக்குவரத்து என்பது ஒரு மிக முக்கியமான சேவைத் துறையாக இருந்து வருவதனாலும், அத்துடன் இந்தியா அதன் துறைமுகங்களை மிகுந்த ஆர்வத்துடன் அபிவிருத்தி செய்து மேம்படுத்தி வருகின்ற காரணத்தினாலும் நாம் இந்தியாவுடனும் இந்திய வியாபாரத்துடனும் அணிசேர்ந்து இரண்டு நாடுகளினதும் நன்மைக்காக துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.117/ ’10

கௌரவ ருவண் ரணதுங்க,— உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ள அரசாங்க அளிப்பு பத்திர காணிகளின் உப பிரிவாக்கல் அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைத்தல்,— ஜய பூமி, சுவர்ண பூமி,ரத்ன பூமி ஆகிய அரசாங்கக் காணி அளிப்புப் பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களின் காணிகளில் உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ளதெனினும், ஆரம்பக் காணி பெற்றவர்களின் இரண்டாம் பரம்பரையின் உரிமையை உறுதி செய்வதற்கும் அவர்களின் வீடு, தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் உப பிரிவாக்கலுக்கான தேவை தோன்றும் போது மாகாண ஆணையாளர், காணி ஆணையாளர் மற்றும் ஜனாதிபதி செயலகத்துடனான தற்போது நடைமுறையில் உள்ள நீண்ட செயன்முறையை குறுகியதாக்கி உப பிரிவாக்க அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.159/ '12

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.160/ '12

கௌரவ புத்திக்க பத்திரண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.161/ '12

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.162/ '12

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.163/ '12

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும் /அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.164/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினை சுதந்திரமானதொரு நிறுவனமாக மாற்றுதல்,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சம்பந்தமான சகல தடங்கல்களையும், முக்கியமாக அரசியல் தலையீடுகள் மற்றும் ஆதரவுகளை அகற்றும் சுதந்திரமான ஒரு நிறுவனமாக ஆக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.165/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால் மூல வாக்களிப்பை மாற்றீடு செய்வதற்காக "முன்கூட்டிய வாக்களிப்பை" அறிமுகம் செய்தல்,— தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை சீர்செய்ய உதவும் "முன்கூட்டிய வாக்களிப்பினால்" தபால்மூல வாக்களிப்பை மாற்றீட செய்வதற்கு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.166/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒரு வெளிப்படையான தேர்தல் இடாப்பினை அறிமுகம் செய்வதற்கு அரசியலமைப்பினை திருத்துதல்,— தற்போது பேணப்பட்டு வருகின்ற ஒரு நிலையான பட்டியலைப் போல் அல்லாது, தேர்தல் இடாப்பு வெளிப்படையான ஓர் இடாப்பாக இருக்கக் கூடியவாறு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.170/ '12

கௌரவ புத்திக பத்திரண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.171/ '12

கௌரவ புத்திக பத்திரண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார்செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.172/ '12

கௌரவ புத்திக பத்திரண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

---

## 2013 பெப்புருவரி 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1652/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மொனறாகலை மற்றும் பதுளை மாவட்டங்களில் பல வருடங்களாக இடைவிடாது சேவையில் ஈடுபடும் பாடசாலை கல்விசாரா ஊழியர்களின் சேவை இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை என்பதையும்;

(ii) 2005 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்க்கப்பட்ட இவர்கள் இதுவரை சிறியதொரு நாளாந்த சம்பளத்திற்கு சேவையாற்றுகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி நிலைமையின் கீழ் இவர்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கல்விசாரா ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ள நிலையிலும் இவர்களது சேவையை நிரந்தரமாக்காமலிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி காரணங்களை தவிர்த்து இவர்களை நிரந்தர ஊழியர் குழாமில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2185/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) கடந்த ஐந்து வருடங்களில் வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமானசேவைகள் (ஸ்ரீ லங்கா) கம்பனி தொடர்பாக,

(i) உபயோகிக்கப்பட்ட மொத்த மூலதனம், ஒதுக்கங்கள் ஆகியவற்றையும்;

(ii) இலாபமா அல்லது நட்டமா என்பதையும்;

(iii) மொத்த பணியாள்தொகுதி உறுப்பினர்களுக்குரிய செலவினம், ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியவற்றையும்;

(iv) பிரயாணி ஒருவருக்கான செலவினத்தையும்;

(v) அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட தீர்வைகள் அல்லது வரிகளின் தொகையையும்

வருட வாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வழங்கப்பட்ட மூலதனம், கடன்கள், உத்தரவாதங்கள் ஆகியவற்றையும்;

(ii) அவற்றின் விபரங்களையும்;

(iii) அவற்றை வழங்குவதற்குரிய நோக்கத்தையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) கம்பனியின் இற்றைவரை நிலுவையாக உள்ள மொத்தக் கடன்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2280/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச பாடசாலை ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தியை உருவாக்கும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் எந்த ஆண்டில் தாபிக்கப்பட்டதென்பதையும்;

(ii) நாடளாவிய ரீதியில் தாபிக்கப்பட்டுள்ள மேற்படி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து மேற்படி நிலையங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள முகாமையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி முகாமையாளர்கள் கல்வியலாளர்கள் சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி நிலையங்களின் மூலம் ஆசிரியர்களுக்கு தொழில்சார் பயிற்சியை பெற்றுக்கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள்;

(ii) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி நிலையங்களின் மூலமாக பயிற்சிகள் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை;

ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2342/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு" கொள்கைத் திட்டத்தின் மூலம் சிறுவயதில் குறையூட்டத்துக்கு ஆளாகின்ற பிள்ளைகளை இந்நிலையிலிருந்து விடுவிப்பதற்குத் தேவையான அனைத்து பால், மருந்து, விட்டமின் மற்றும் உணவு வகைகளை 'ஜனசபா' ஊடாக விநியோகிப்பதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது இவ்வேலைத் திட்டம் அமுல்படுகின்றதான என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இது செயற்படுத்தப்படும் 'ஜனசபா' அலுவலகங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2381/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை வெளிநாட்டுச் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு தரத்தின் அடிப்படையிலும் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இதுவரை,

(i) இலங்கை வெளிநாட்டுச் சேவையில் ஈடுபட்டிருக்கும் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து சேவைக்குச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைய யாதென்பயும்;

(ii) இலங்கை வெளிநாட்டுச் சேவைக்குப் புறம்பாக தூதுவர் அலுவலகங்களில் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(iii) இலங்கைத் தூதுவர் அலுவலகங்களில் பணிபுரியும் நிரந்தர அரச சேவையைச் சாராத வேறு உத்தியோத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே ஆ(ii ) மற்றும் (iii ) இல் வினவப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர், பதவி மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட ஆண்டு ஆகியவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இலங்கை வெளிநாட்டுச் சேவைக்குப் புறம்பாக தூதுவர் அலுவலக சேவைக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுகையில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறை யாது என்பதையும்;

(ஈ) இன்றேல் ஏன்?

2870/ '12

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நுழைவுத் தேவைப்பாடொன்றாக கலைகள் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட நுண்ணறிவுப் பரீட்சை முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட நுண்ணறிவுப் பரீட்சையை முடிவுறுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், பல்கலைக்கழக அதிகாரிகளுடன் ஏதாவது கலந்துரையாடல்கள் நடைபெற்றனவா என்பதையும்;

(iii) இல்லையெனில், அத்தகைய கலந்துரையாடல்களை மேற்கொள்ளாமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(iv) அவ்வாறெனில், நுழைவுத் தேவைப்பாடாதிய நுண்ணறிவுப் பரீட்சையை முடிவுறுத்துவது தொடர்பில் பல்கலைக்கழக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட நிலைப்பாடு என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தம்முடன் நல்லுறவைப் பேணும் பரீட்சார்த்திகளுக்கு விரிவுரையாளர்கள் சலுகை காட்டுகின்றனர் என்ற அடிப்படையில் நுண்ணறிவுப் பரீட்சை துஷ்பிரயோகமிக்கது என பரீட்சார்த்திகளிடமிருந்து மனுக்கள் அமைச்சிற்கோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கோ கிடைக்கப் பெற்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், இது தொடர்பில் புலனாய்வோ அல்லது விசாரணையோ ஏன் மேற்கொள்ளப்படவில்லையென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சையின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கு அமைச்சு முயன்றுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2917/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பில் இலங்கையில் அமுலிலுள்ள நடைமுறைச் சட்டமொன்று கிடையாதென்பதையும்;

(ii) இலங்கையினுள் நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பாக நடைமுறைச் சட்டமொன்று விதிக்கப்படல் வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவினால் "ரொனீ பர்னாந்து" வழக்கில் விதப்புரை செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பான நடைமுறைச்சட்டமூலம் ஒன்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு நீதி அமைச்சரிடம் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையினுள் நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பாக நடைமுறைச் சட்டமொன்று விரைவிலேயே விதிக்கப்படல் வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாராவென்பதையும்;

(ii) ஆமெனில், அதனோடு தொடர்புடைய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1953/ '11

கௌரவ புத்திக பத்திரண,—பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) காலி மாவட்டத்தின், அக்மீமன பிரதேசத்தின் தல்கம்பல கொனாமுல்ல வெவேகொட தேயிலைத் தொழிற்சாலை ஐந்து வருட காலமாக மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக பிரதேசத்தைச் சேர்ந்த சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்குத் தமது தேயிலைக் கொழுந்துகளை விற்பனை செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி தொழிற்சாலையில் ரூபா ஒரு கோடிக்கு அதிகமான பெறுமதியுடைய ஆதனங்கள் சேதமடைந்து வருகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தேயிலைத் தொழிற்சாலை மூடப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இவ்வாறான தேயிலைத் தொழிற்சாலையொன்றை அழிவதற்கு இடமளிப்பதானது பெரும் தவறாகும் என்பதால் அதன் உற்பத்திப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2282/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன ,மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் ஊர்வலத்தை நடத்துவதற்காகச் செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

(ii) தலதா ஊர்வலத்திற்காக தலதா மாளிகையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(iii) இதற்காக அரச நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(iv) பணம் வழங்கிய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட ஒவ்வொரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(v) தனியார் நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(vi) பணம் வழங்கிய தனியார் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட ஒவ்வொரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்

2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையிலான கால எல்லையின் பொருட்டு வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2343/ ' 12

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) "மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு" கொள்கைத் திட்டத்தின் மூலம் இலங்கையில் பிறக்கின்ற அனைத்து பிள்ளைகளினதும் சுயவிபரக் கோவையொன்று இப்பிள்ளையின் நிரந்தர வதிவிடத்திற்குரிய 'ஜனசபா' செயலகத்தில் பேணிவரப்படவேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது இவ்வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2464/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2009ஆம், 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான,

(i) அரசாங்கத்தால் கவனம் செலுத்தப்படும் பிரதான கைத்தொழில்களையும்;

(ii) மேற்குறிப்பிட்ட துறைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளை வருடாந்த அடிப்படையிலும்;

(iii) ஆண்டொன்றுக்கு அத்துறைகளில் ஏற்படுத்தப்பட்ட மேலதிக தொழில் வாய்ப்புக்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கு இதற்கு முன்னரும் தற்போதும் வழங்கப்பட்ட வரிகள் மற்றும் ஊக்குவிப்புக்களையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கு 2009 ஆம், 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட மொத்த வருமானத்தினை வருடாந்த அடிப்படையிலும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1955/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கா/பிரஜாபதி கோதமி மகளிர் கல்லூரிக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் தனிப்பட்ட உரிமையாளரொருவர் அன்பளிப்பாக நல்கிய அம்பலன்கொடை விலேகொடையில் அமைந்துள்ள மூன்று மாடிவீடு, இதுவரை எந்தவித பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாது சேதத்திற்குள்ளாகி வருகின்றது என்பதையும்;

(ii) சேதமடைந்த நிலையில் காணப்படும் மேற்படி வீடு, பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகளது உயிருக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்பதையும்;

(iii) மேற்படி கட்டிடத்தை இடித்தகற்றிவிட்டு, அந்த இடத்தில் கூட்ட மண்டபமொன்றை அமைத்துத் தருமாறு பாடசாலை அதிபர் பல தடவைகள் உரிய அதிகாரிகளிடம் வேண்டியுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாடசாலை அதிபரின் மேற்படி கோரிக்கைக்கு அமைய செயற்படும் பொருட்டு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2344/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாசடைந்த சுற்றாடல் நிலைமைகள் காரணமாக மக்கள் நோய்வாய்ப்படுவதை தடுப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் சுகாதார அமைச்சும் இணைந்து செயற்பட வேண்டுமென மஹிந்த சிந்தனை தொலைநோக்கு கொள்கைத் தொடரில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் செயற்படுவதற்குத் தேவையான கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கொள்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2373/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கன் எயார்லைன் கம்பனியின் நிகழ்கால தவிசாளர் யார் என்பதையும்;

(ii) இவரது கல்வி மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) இவரது சம்பளம் யாது என்பதையும்;

(iv) பிற படிகளைப் பெறுவாரெனில் அவை யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு படியினதும் பெறுமதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஸ்ரீலங்கன் எயார்லைன் கம்பனியில் உள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பணிப்பாளரதும் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு வழங்கப்படுகின்ற படிகளின் பெறுமதிகள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஸ்ரீலங்கன் எயார்லைன் கம்பனியின் உப தவிசாளரோ அல்லது செயற்படு பணிப்பாளரோ உள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில் இவரது கல்வி மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) இவருக்கு உரித்தான சம்பளம், ஊதியம் மற்றும் பிற படிகளின் பெறுமதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2466/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், ஆண்டு அடிப்படையில் வெவ்வேறாக,

(i) நெற்பயிர்ச்செய்கைக்கு மானியமாகக் கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்ட தொகையையும்;

(ii) சிறு போகம் மற்றும் பெரும் போகத்தின் மொத்த நெல் விளைச்சலையும்;

(iii) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஏக்கருக்கான சராசரி விளைச்சலையும்; மற்றும்

(iv) சிறுபோக மற்றும் பெரும்போக விளைச்சல்களுடன் 2005 ஆம் ஆண்டில் அதே போகங்களின் நெல் விளைச்சல் ஒப்பீட்டையும்

அவர் கூறுவாரா?

(ஆ) விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் நாட்டின் உற்பத்தியையும் நெல் விளைச்சலையும் அதிகரிப்பதற்கு உதவியதா என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2013 பெப்புருவரி 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1957/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் ஹக்மனவில் அமைந்துள்ள மாவரல பொலிஸ் நிலையத்திற்குச் சொந்தமான அனைத்துக் கட்டடங்களும் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளனவெனவும்;

(ii) இந்நிலைமை அங்கு கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தலாகும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாவரல பொலிஸ் நிலையத்திற்கான புதிய கட்டடங்களை நிர்மாணித்து அங்கு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சேவை பெறுகின்ற பகுதிவாழ் மக்களுக்கும் வசதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) அதற்காக நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2356/ '12

கௌரவ.சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற "பத்து மாத சம்பள முற்பண" கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை வருட வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பங்களில் ஒவ்வொரு வருடத்திற்காகவும் செலுத்தப்பட்ட சம்பள முற்பண கடன்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அவசர பணத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக கோரப்படும் மேற்படி கடன் தொகையை செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) 2011ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்றுள்ளதும் இன்றுவரை செலுத்தப்படாதுள்ளதுமான சம்பள முற்பண கடன் விண்ணப்பங்களுக்குரிய கொடுப்பனவுகளை செலுத்தி முடிக்கும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2384/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க ஔடதக் கூட்டுத்தாபனத்தின் ஊழல்களை அல்லது முறைகேடுகளை புலனாய்வு செய்வதற்காக புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர் நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நியமனத்தை மேற்கொண்ட அதிகாரி யாரென்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தருக்கு மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் உரித்தாகும் ஏனைய வசதிகள் யாவையென்பதையும்;

(v) நியமிக்கப்பட்ட திகதி தொடக்கம் இன்றுவரை இந்த உத்தியோகத்தரால் புலனாய்வு செய்யப்பட்டுள்ள ஊழல்கள் அல்லது முறைகேடுகள் யாவையென்பதையும்;

(vi) அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vii) இவரது சேவைக்காலம் முடிவுக்கு வரும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2467/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உரம் யாருக்கு மானிய அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பதையும்;

(ii) ஒரு விவசாயிக்கு மானிய அடிப்படையில் வழங்கப்படுகின்ற உரத்தின் அளவினையும்;

(iii) மானிய உரத்திற்காக விண்ணப்பிப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறையினையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் உர மானியம் வழங்குவதற்காக செலவிட்ட உண்மையான தொகையினை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்;

(ii) அத்தகைய மானியத்தின் உண்மையான கொடுப்பனவுகளுக்கு ஆதரவளிப்பதற்கான காசோட்டத்தினையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வருடங்களின் வரவு செலவுத் திட்டத்தில் உர மானியத்திற்காக ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொகையையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2919/ ’12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1977.02.14ஆம் திகதி தொடக்கம் 2009.05.19ஆம் திகதி வரை இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் சேவையிலீடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் தாய் மற்றும் தகப்பனுக்கு ரூபா. 750/- மாதாந்தம் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இத்திட்டத்தின் கீழ் மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படும் தாய்மார்களினதும் தகப்பன்மார்களினதும் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட கொடுப்பனவுக்குத் தேவையான பணத்தொகையை அரசு ஏற்கின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், இப்பணத்தொகையை பெற்றுக்கொள்ளும் வழிமுறை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பொலிஸ் அத்தியட்சகரின் பெற்றோருக்கு ரூபா 750/- மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படுதல் போதுமானதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இது போதுமானதென்பதை உறுதிப்படுத்த அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அளவுகோல் யாதென்பதையும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2959/ ’12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அநுராதபுரம் கல்வி வலயத்தில் 2012 ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மாதிரி வினாத்தாள்களில் பெருமளவிலான பிழைகள் இருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட வினாத்தாள்களை மாணவர்களுக்கு வழங்குவதற்கு முன்னர் அவற்றில் காணப்பட்ட தவறுகளை திருத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அண்மித்திருந்ததொரு சந்தர்ப்பத்தில் பிழைகளுடன் கூடிய மாதிரி வினாத்தாள்களை மாணவர்களுக்கு வழங்கியதன் மூலம் ஏற்பட்ட தீங்கிற்கு பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினர்கள் யாவரென்பதையும்;

(iii) மேற்கூறப்பட்டவாறான சிக்கலான நிலைமைகள் மீண்டும் ஏற்படாத வண்ணம், பொறுப்புடன் கருமமாற்றக்கூடிய உத்தியோகத்தர்களை சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2994/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்க சேவையில் தற்போது காணப்படுகின்ற மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களின் எண்ணிக்கை பதவிப் பெயர்களுக்கு அமைய தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) அண்மையில் அபிவிருத்தி உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்டு தற்போது பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள மொத்தப் பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை மாகாண ரீதியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3004/ ' 12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிரபல்யத் தன்மையின் ஒழுங்கில் எந்த வருமான பெறுமதியைக் கொண்ட முத்திரைகள் தபால் நோக்கங்கங்களுக்காக மிகவும் பிபல்யமானவைகள் என்பதையும்;

(ii) ரூபா 5 பெறுமதியான முத்திரை வழக்கமாக 2செ.மீ. X 2.5 செ.மீ. அளவைக் கொண்டதா என்பதையும்;

(iii) கப்பல் தரகர் நிறுவனத்தின் 25 வருட பூர்த்தியை கொண்டாட அச்சிடப்பட்ட ரூபா 5 பெறுமதியான முத்திரையின் அளவுகளையும்;

(iv) பேராதனையிலுள்ள தொங்குபாலம் மற்றும் மஹகந்தராவையில் அமைந்துள்ள புராதன கற்பாலம் ஆகியவை அச்சிடப்பட்டுள்ள ரூபா 10.00 பெறுமதியான இரண்டு முத்திரைகளின் அளவுகளையும்;

(v) மேலே (iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப்படும் ஒவ்வொரு முத்திரைக்குமான காகிதம், அச்சிடல், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் இதர செலவுகள் உள்ளிட்ட மொத்தச் செலவையும்; மற்றும்

(vi) மேலே (iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு முத்திரையினதும் செலவுகளுடன் வழக்கமான 2செ.மீ. X 2.5 செ.மீ. அளவிலான ரூபா 5.00 பெறுமதியான முத்திரையின் செலவின் ஒப்பீட்டையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3098/ '12

கௌரவ பீ. ஹரிசன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் வண்டல் மண் அகற்றுவதற்காக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள மொத்த வாவிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) பிரதேச செயலாளர் பிரிவுகளின் பிரகாரம் வெவ்வேறாக மேற்படி வாவிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வாவிக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்கு நீர்ப்பாசன மற்றும் கமநல சேவைகள் உத்தியோகத்தர்களின் உதவி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இல்லையெனில், இதற்காக பிறரின் உதவி பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில் இவர்கள் யாவர் என்பதையும்;

(iv) இவர்கள் உரித்தாயுள்ள நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வாவியிலிருந்தும் வண்டல் மண் அகற்றப்பட்டுள்ள ஏக்கர்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) வண்டல் மண் அகற்றப்பட்டதன் பின்னர் இரண்டு போகங்களில் பயிரிடுவதற்குப் போதுமான நீரை மேற்படி வாவிகளில் சேகரித்து வைக்கலாமா என்பதையும்;

(vii) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வாவிகளின் வண்டல் மண் வருடம் தோறும் அகற்றப்படுகின்றதா என்பதையும்;

(ii) இல்லையெனில் அது மேற்கொள்ளப்படும் கால வீச்சிடை யாதென்பதையும்;

(iii) இத்தடவை வண்டல் மண் அகற்ற முடியாமற்போன வாவிகளில் குறிப்பிட்ட பணிகள் எதிர்வரும் சிறு போகத்தில் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3135/ '12

கௌரவ வசந்த அளுவிகாரே,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தளை நாவுல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள நாலந்த கைத்தொழிற் பேட்டையினுள் தற்போது,

(i) உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை;

(ii) நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை;

(iii) நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட கைத்தொழிற் பேட்டைக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பு;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட கைத்தொழிற் பேட்டையினுள் தொழிற்சாலையொன்றுக்கு வழங்கப்படும் கூடியபட்ச மற்றும் குறைந்தபட்ச நிலப்பரப்பின் அளவு;

(iii) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள காணியின் அளவு தனித்தனியாக;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட காணிகள் வழங்கப்பட்டதன் அடிப்படை;

(v) தற்போது கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தக் காணியின் அளவு மற்றும் எஞ்சியுள்ள காணியின் அளவு;

(vi) மேற்குறிப்பிடப்பட்ட கைத்தொழிற் பேட்டையினுள் தொழிற்சாலைகளை ஆரம்பித்துள்ள தொழிற்சாலை உரிமையாளர்களின் பெயர்கள்

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நாலந்த கைத்தொழிற் பேட்டைக்கு உரித்தான நிலத்திலிருந்து தனியார் பாவனைக்காக காணித் துண்டுகளை வழங்குவதற்கான இயலுமை காணப்படுகின்றதா;

(ii) ஆமெனில், இது மேற்கொள்ளப்படும் அடிப்படை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3139/ '12

கௌரவ அப்துல் ஹலீம்,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹாரிஸ்பத்துவ அபிவிருத்தி மன்றம் எனப்படும் நிறுவனத்தினால் 1994 ஆம் ஆண்டில் ஹல்லொலுவ, வராதென்ன மகாவலி ஆற்றின் நடுவே அமைந்துள்ள வரலாற்று ரீதியிலானதொரு இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு பௌத்த பிக்குமாருக்குப் பூஜிக்கப்பட்ட '*உதகுக் கேப சீமாமாலகய*' எனும் தலமானது கண்டீய அமரபுர சங்கப் பிரிவின் உயர்தீட்சையளிக்கின்ற மதச் சடங்குகள் மேற்கொள்ளப்படும் தலமாகும் என்பதையும்;

(ii) தற்போது இங்கிருந்த புனித தலம் நீக்கப்பட்டு மேற்படி இடத்தில் தனியார் மின் உற்பத்தி நிலைமொன்றை நிர்மாணிப்பதற்குத் தேவையான ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

(iii) வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மேற்படி புனித தலம் அழிக்கப்படுதல் தொடர்பில் மிகவும் அதிருப்திக்குள்ளாகியிருக்கும் அமரபுர சமயப் பிரிவுக்குரிய நாடுபூராவும் உள்ள அநேகமான பொது மக்களும் பிக்குமாரும் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த தயாராகிவருகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கண்டீய அமரபுர சமயப் பிரிவின் வீழ்ச்சிக்கு ஏதுவான மேற்படி தனியார் மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) வரலாற்றுப் புகழ்மிக்கதும் பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்ததுமான '*உதகுக்கேப சீமாமாலகய*' வில் எதிர்காலத்திலும் தடையின்றி மேற்படி சமயப் பிரிவின் மதச் சடங்குகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1958/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள சிலாபம் பொது வைத்தியசாலையில் தற்போது நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறை காரணமாக பிரதேச மக்கள் தமது சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சிலாபம் பொது வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை துரிதமாக நிறைவு செய்து பிரதேச மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) இதற்காக தற்போது திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறாயின், அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2362/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டுவன பிரதேச செயலகப் பிரிவில் உலஹிட்டியாவ மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் வெலிப்பிட்ய இம்புல்கொட வீதியில் அம்பகஸ்ஆர சந்தியில் இருந்து முன்னோக்கியதாக ஏறக்குறைய 1 1/2 கிலோமீற்றர்கள் கொங்கிறீட் இடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மாகாண குறித்துரைக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூ.1,287,312 அளவிலான மதிப்பீடொன்று அப்பணிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) உரிய தரங்களுக்கு இணங்க அமைக்கப்படாமையால் ஏற்கெனவே அவ்வீதி நிலத்தில் அமிழ்ந்துள்ளதென்பதையும்;

(iv) இருந்த போதிலும் பிரதேச சபை உறுப்பினர்களினதும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினதும் எதிர்ப்பினைப் பொருட்படுத்தாமல் அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் அழுத்தத்தின் பேரில் அதன் ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீதியை அமைத்தல் தொடர்பான தலத்திற்கான தர அறிக்கையில் பெற்றுக்கொண்டு இந்தப் பணவிரயம் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து முறைதகாத வகையில் செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2386/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்குள் மனித உரிமைகள் மீறப்படல் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எத்தனை முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்பதையும்;

(ii) அவற்றில் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) புலனாய்வு செய்யப்பட உள்ள முறைப்பாடுகள் அதே ஆண்டில் புலனாய்வு செய்யப்படாமைக்கான காரணம் என்ன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட காலப்பகுதிக்குள் மனித உரிமைகள் மீறப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு நிறுவனங்கள் தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இதன்படி ஆகக் கூடிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2468/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத் துணி வழங்குதல் எப்போது ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்;

(ii) யாரால் அத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேற்படி இத்திட்டத்திற்காக 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில்,

(i) நன்மைபெறும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஆண்டொன்றுக்கு ஒதுக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) உண்மையிலேயே செலவிட்ட தொகை யாதென்பதையும்;

வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பாடசாலைச் சீருடைக்காக வழங்கப்படுகின்ற துணி வகைகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவைகளா அல்லது இறக்குமதி செய்யப்பட்டவைகளா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2013 பெப்புருவரி 21, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1959/ '11

கௌரவ புத்திக்க பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில் காலி வலயக் கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படும் பிலகொட கனிஷ்ட வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தின் கூரை சிதைவடைந்து உடைந்து விழும் நிலையில் உள்ளதென்பதையும்;

(ii) இந்நிலைமை பாடசாலை மாணவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாகி உள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சிதைவடைந்துள்ள இக்கட்டிடத்தை துரிதமாக மறுசீரமைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) இதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறாயின், மறுசீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2364/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட திஸ்ஸமகராம வைத்தியசாலையில் பணிபுரிவதற்காக,

(i) நிருவாகம் மற்றும் நடத்தை ஒழுங்குகளைத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்குத் தேவையான வைத்தியசாலை பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டள்ளாரா;

(ii) சர்வாங்க நோய், சிறுவர் நோய், மகளிர் மற்றும் மகப்பேறு, சத்திரசிகிச்சை மற்றும் உணர்வு நீக்கும் ஆகிய பிரதான ஆகிய பிரதான மருத்துவ நிபுணர்கள் மற்றும் இவர்களுக்கு உதவும் சுகாதார மருத்துவ அலுவலர்கள் போதியளவு நியமிக்கப்பட்டுள்ளனரா;

(iii) மேற்குறிப்பிட்ட மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருப்பின் அதன் எண்ணிக்கை யாது;

(iv) பிரதான தாதியர் நிருவாகிகள், தாதியர் உத்தியோகத்தர்கள் போதியளவு கவனிப்பாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா;

(v) குறிப்பிட்ட பதவிகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பின் ஒவ்வொரு பிரிவின் கீழும் நியமிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ஆதார வைத்தியசாலையாக இருப்பினும் தொடர்ந்தும் திஸ்ஸமகாராம வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிறைவு செய்து உரிய நிலைக்குக் கொண்டு வருவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2411/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012.02.11 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு திகதியில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றம் காரணமாக அசௌகரியத்திற்குள்ளான வாடகை முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இம் முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு எரிபொருள் நிவாரண உதவியொன்று வழங்கப்படுமா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அது வழங்கப்படும் முறையியல் யாது என்பதையும்;

(iv) இந் நிவாரண உதவி வழங்கப்படும் கால எல்லை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வாடகை முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு எரிபொருள் நிவாரண உதவி வழங்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) நாட்டுக்கு சுமையாகாமல் சுயதொழில் ஈடுபட்டு சமூகத்துக்கும் சேவை வழங்கி வரும் இப்பிரிவினருக்கு நிவாரணம் வழங்காமை பெரும் அநீதி அல்லவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2681/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு கொமர்சல் கம்பனி (CCC) லிமிட்டட் தொடர்பாக,

(i) மகிந்த சிந்தனை கொள்கைகளுக்கு எதிராக முகாமைத்துவத்தை தனியர் மயப்படுத்துவதற்கு அல்லது தனியார்த் துறைக்கு மாற்றுவதற்கான காரணம் யாவை என்பதையும்;

(ii) புதிய உரிமையாளர்கள் அல்லது முகாமைத்துவப் பங்காளர்களையும், ஒப்பந்தத்தையும்;

(iii) முகாமைத்துவக் கணக்குகள் எப்போது சமர்ப்பிக்கப்பட்டன என்பதையும்;

(iv) இன்றேல், எப்பொது சமர்ப்பிக்கப்படும் என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) "CCC" லிமிட்டட்டின் காணிகளை வெளிநாட்டவருக்கு விற்பதன் காரணங்களையும்;

(ii) காணிகளின் விற்பனை விலையையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல்களில் 100% வரி செலுத்தப்பட்டதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், செலுத்திய திகதியையும்;

(v) இன்றேல், செலுத்தாமைக்கான காரணங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) மேற்படி காணி கொடுக்கல் வாங்கல்களில் கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், கேள்விப் பத்திர மதியுரை அல்லது தெரிவுக் குழுவின் உறுப்பினர்களையும்;

(iii) இன்றேல், அது மேற்கொள்ள அடிப்படை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2936/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரையான காலத்தில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையில் இடம்பெற்ற ரூபா 245,783,998.72 மோசடியை வெளிப்படுத்தாமை தொடர்பில் அரசாங்க கணகாய்வுக்குப் பொறுப்பான மேற்பார்வை உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கூறல் பற்றி விசாரணை நடத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் S-1/12/14(xiii) ஆம் இலக்க 2008 சனவரி மாத கட்டளையின்படி மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி அறிக்கையின் பரிந்துரைகள் யாதென்பதையும்;

(iii) மேற்படி கால கட்டத்தில் மேற்படி நிறுவனத்தில் கணக்காய்வுக்குப் பொறுப்பாகவிருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்சார் மேற்பார்வை உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் தற்போது இவர்கள் வகிக்கும் பதவிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி பரிந்துரைகளுக்கமைய பொறுப்புக்கூற வேண்டிய மற்றும் குற்றமிழைத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2961/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் நிதியத்தின் கீழ் ரூபா பதினேழு இலட்சம் செலவில் நிர்மாணிப்பதற்காக, 2003 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட யட்டதொல நீர் வழங்கல் திட்டத்தில் பாதியளவு மாத்திரமே தற்போது பூர்த்தியாக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இந்நிலையின் கீழ் யட்டதொல கனிஷ்ட வித்தியால மாணவர்களின் குடிநீர் தேவைகளை நிறைவு செய்துகொள்ள இயலாதுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) யட்டதொல நீர் வழங்கல் திட்டத்தை பாதியளவு பூர்த்திசெய்தற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) யட்டதொல கிராமவாசிகளினதும் யட்டதொல கனிஷ்ட வித்தியால மாணவர்களினதும் குடிநீர் தேவையினை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2996/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது அரசாங்க சேவையில் உள்ள முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இதில் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அமைய தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பல்வேறு அரச நிறுவனங்களிலும் கடமையின் பொருட்டு ஒழுங்கான வேலைத்திட்டமொன்று இன்றி பட்டதாரிகள் இணைக்கப்படுவதன் காரணமாக முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் சிக்கலொன்று உருவாகியுள்ளதை அவர் அறிவாரா?

(இ) மேற்படி சிக்கலைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3006/ ' 12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நட்டாண்டு அரசிறை நிலைமை பற்றிய அறிக்கையின் நோக்கம் அதன் அரசிறை மூலோபாயக் கூற்றில் குறிப்பிடப்பட்டவாறு அரசிறை மூலோபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு பொதுமக்களை இயலச் செய்வதாகும் என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட வருடத்தின் முதல் நான்கு மாதங்களுக்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மைத் தொகைகளின் ஒரு கூற்று செலவினம், வருமானம் காசுப்பாய்ச்சல், கடன்பெறுகைகள் ஆகியவை தொடர்பான செலால்லப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 2012 யூன் 29 ஆம் திகதிய 2012 ஆம் ஆண்டுக்கான நட்டாண்டு அரசிறை நிலைமை பற்றிய அறிக்கை 2012 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்குமான

(i) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மைச் செலவினத்தையும்;

(ii) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை வருமானத்தையும்;

(iii) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மைக் காசுப்பாய்ச்சலையும்;

(iv) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை கடன் பெறுகைகளையும்

உள்ளடக்கியதா என அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3100/ '12

கௌரவ பீ. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வடமத்திய மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும்,

(i) அரச பாடசாலைகள்;

(ii) 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2012ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தினுள் மூடப்பட்டுள்ள பாடசாலைகள்;

(iii) கடமையாற்றும் ஆசிரியர்கள்;

(iv) காணப்படுகின்ற மொத்த ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(v) ஒவ்வொரு பாடத்திற்கமைய நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள்;

(vi) பதில் கடமையாற்றும் அதிபர்கள்;

(vii) தரங்களையுடைய ஆசிரியர்கள்;

(viii) தொண்டர் ஆசிரியர்கள்

எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வட மத்திய மாகாணத்தில் பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு சம்பளம் செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அந்தச் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்கூறிய மாவட்டங்களில் அரச பாடசாலைகளில் ஆசிரியர்களாக சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றார்களா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், அந்த எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) இவர்களுக்கு கல்வித் திணைக்களத்தின் அல்லது வேறு நிறுவனத்தின் கீழ் ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) எதிர்காலத்தில் இவர்களை ஆசிரியர் சேவையில் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1960/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் இதுவரை பாதுகாப்பு அலுவல்களில் ஈடுபட்ட கம்பனியுடனான உடன்படிக்கை உரிய காலத்துக்கு முன்னரே இரத்துச் செய்யப்பட்டு இவர்களிடமிருந்து சேவையைப் பெறுதல் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி பாதுகாப்பு சேவையை வழங்கல் வேறு பல தனியார் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பல்கலைக்கழகங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள புதிய கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு கம்பனியினதும் உரிமையாளர்களது பெயர்கள் வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள புதிய கம்பனிகளுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒப்படைக்கப்படுகின்றபோது கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதா;

(ii) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களை முன்வைத்த கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(iii) கேள்விப் பத்திரங்கள் கோரப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை;

(iv) பல்கலைக்கழகங்களில் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு இருக்க வேண்டிய ஆகக்குறைந்த தகைமைகள் மற்றும் இவர்களுக்கு கிடைக்க வேண்டிய சிறப்புரிமைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2365/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1987ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க கமக்காரார் ஓய்வூதிய சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கமக்காரார் ஓய்வூதியத் திட்டத்திற்கு கமக்காரார் பங்களிப்புச் செய்வதை ஆரம்பித்த வருடம் யாதென்பதையும்;

(ii) தற்போதும் இத்திட்டத்திற்கு கமக்காரார்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஓய்வூதியத்திற்கான பங்களிப்பைப் பெற்ற கமக்காரார்களிடம் இன்றுவரை அறவிடப்பட்டுள்ள மொத்தப் பங்களிப்புத் தொகை யாதென்பதையும்;

(ii) 60 வலயத்தைத் தாண்டி இதுவரை ஓய்வுபெற்றுள்ள கமக்காரார்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஓய்வுபெற்ற கமக்காரர் ஒருவருக்கு மாதாந்தம் செலுத்தப்படும் ஆகக்குறைந்த ஓய்வூதியத் தொகை யாதென்பதையும்;

(iv) 2011 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் செலுத்தப்பட்ட மொத்த ஓய்வூதியத் தொகை யாதென்பதையும்;

(v) கமக்காரர்களுக்கான ஓய்வூதியம் வழங்கல் மாதாந்தம் நடைபெறாவிடின் இதனை அவ்வாறு செயற்படுத்தும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2413/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012.02.11ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு திகதியில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றத்தினால் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ள கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்படவிருக்கின்ற நடவடிக்கை யாதென்பதையும்;

(i) மேற்படி கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனை வழங்கும் முறையியல் யாதென்பதையும்;

(iv) மேற்படி நிவாரணம் வழங்கப்படும் கால எல்லை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்கப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) பெரும் உயிராபத்துக்கு முகம்கொடுத்து நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய சேவையாற்றுகின்ற கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்காமை பெரும் அநீதியென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2683/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட பீ.சீ.சீ. லங்கா நிறுவனம் இறுதியாக இயங்கியது எப்போது என்பதையும்;

(ii) பீ.சீ.சீ. லங்காவின் இற்றைவரையான கணக்குகள் யாதென்பதையும்;

(iii) அந்நிறுவனத்தின் தற்போதைய நிலைமையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட பீ.சீ.சீ. லங்கா நிறுவனத்திற்குச் சொந்தமான 212 பேர்ச் காணி ஏன் விற்கப்பட்டது என்பதையும்;

(ii) சொல்லப்பட்ட காணி யாருக்கு விற்கப்பட்டது என்பதையும்;

(iii) முறையானதொரு கேள்விப்பத்திர நடைமுறையைப் பின்பற்றி மேற்சொன்ன கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல், கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமைக்கான காரணங்கள் யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பணியாட்களுக்கு நட்டஈடுகள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், ஒவ்வொரு நபருக்கும் நட்டஈட்டாக வழங்கப்பட்ட தொகையை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) அவர்களுக்கு நட்டஈடு எப்போது வழங்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3040/ '12

கௌரவ (திருமதி) றோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெதுறு ஓயாவின் இருமருங்கிலும் 40 கிலோ மீற்றர் தூரத்திற்கு பாரிய மருதமரங்களை வெட்டும் கள்ளக்கடத்தல் இடம்பெறுகின்றது என்பதையும்;

(ii) சிரன்கொட பிரதேச கிராமவாசிகள் 2012 யூன் 01 ஆம் திகதி குருநாகல் பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு அலகில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்படி வெட்டுமர கள்ளக்கடத்தலை மேற்கொண்டவர்கள் கைதுசெய்யப் பட்டிருந்தார்கள் என்பதையும்;

(iii) 2012 யூன் 01 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு கைது செய்யப்பட்ட மேற்படி கள்ளக்கடத்தல்காரர்கள் அதே தினத்தன்று பி.ப. 6.30 – 7.00 மணிக்கிடையே விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(iv) மேற்படி சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு இரண்டு வாரங்களின் பின்னர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாரியபொல – எல்ல பிரதேசத்திலிருந்து வெல்லவ கணேவத்தை பிரதேசம் வரை தெதுறு ஓயாவை அண்மித்ததாக இதுவரை வெட்டப்பட்டுள்ள மருதமரங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி மருதமரங்கள் அழிக்கப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்ட கள்ளக்கடத்தல்காரர்கள் யாவர் என்பதையும்;

(iii) கைது செய்யப்பட்ட மேற்படி கள்ளக்கடத்தல்காரர்களை மேலே அ (iii) இல் குறிப்பிட்டுள்ளவாறு விடுதலை செய்து அனுப்புவதற்கு அறிவுரை வழங்கியவர்கள் யாவர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3094/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1996- 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையில் இடம்பெற்ற மோசடிகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமையின் காரணமாக கணக்காய்வுப் பரிசோதகர் ஜயவர்த்தன என்பவர் மோசடிச் செயலொன்றை மேற்கொண்டுள்ளாரா என்பது பற்றி முறையானதொரு விசாரணையை நடாத்துமாறு பொலிஸ் திணைக்களத்தின், கொழும்பு மோசடிப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கணக்காய்வுப் பரிசோதகர் இலஞ்சம் பெற்றுள்ளாரா என்பதை உறுதி செய்து கொள்வதற்கான விசாரணையொன்றை நடாத்துமாறு இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரணைசெய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர் தொழில்வாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கு சம்பளமற்ற லீவு அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) முறையான குழுவொன்றினால் நடாத்தப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் சிபார்சுகளை அமுல்படுத்தாது, மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இவருக்கு லீவு அங்கீகரிக்கப்பட்டுள்ளமை சட்டவிரோதமானது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 பெப்புருவரி 22, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1941/ '11

கௌரவ புத்திக பத்திரன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள அலபலாதெனிய பிரதேச தேயிலை விஸ்தரிப்பு நிலையத்துக்குரிய கட்டிடங்கள் மற்றும் தேயிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலம் பயன்படுத்தாமல் கைவிடப்பட்டுள்ளமையினால் காடடர்ந்து வருகின்றதென்பதையும்;

(ii) மேற்படி நிலையம் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருப்பது பெரும் தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அலபலாதெனிய பிரதேச தேயிலை விஸ்தரிப்பு நிலையம் கைவிடப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையத்தை புனரமைத்து அதன் மூலம் பிரதேசத்தின் தேயிலைச் செய்கையாளர்களின் துறைசார்ந்த பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2187/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டில் இயங்காமலிருக்கும் அரசாங்க தொழில் முயற்சிகளின் எண்ணிக்கையையும்;

(ii) அம்முயற்சிகளின் பெயர்களையும்;

(iii) அந்நிறுவனங்களில் தற்போது பணிபுரிந்துகொண்டிருக்கும் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையையும்;

(iv) மேற்படி நிறுவனங்களின் இற்றைவரையான மொத்த நட்டத்தையும்;

(v) அந்நிறுவனங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இயங்காமலிருக்கும் அரசாங்க முயற்சிகள் தனியார்மயப்படுத்தப்படவுள்ளனவா அல்லது மூடப்படவுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், அவை இத்தருணத்தில் ஏன் மீள்மூலதனமாக்கப்படுகின்றன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2368/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை 'இலங்கையை வெற்றிபெறச் செய்வோம்' கொள்கைத் தொடரின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவாக ஒரு வேளை சோறு இலவசமாக வழங்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின்படி அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பகல் உணவு கிடைக்கின்றதா என்பதையும்;

(ii) இன்றேல் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது பகல் உணவாக ஒரு வேளை சோறு வழங்கப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பகல் உணவு வழங்குவதற்காக மேற்படி பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2415/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "இலங்கை அபிவிருத்தி சேவை" என்ற பெயரில் அரச தொழில் வழங்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதன் கீழ் சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகளின் குறைந்தபட்ச தகமைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு நிரந்தரமானதும் ஓய்வூதியம் உள்ளதுமான பதவிகள் வழங்கப்படுமா என்பதையும்;

(iv) அந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் நடைமுறை யாது என்பதையும்;

(v) சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(vi) இவர்களுக்கு ஒப்படைக்கப்படும் கடமைப் பொறுப்புக்கள் யாவை என்பதையும்;

(vii) இதன் கீழ் ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(viii) அரச சேவையில் வெற்றிடங்கள் பெருமளவில் நிலவும் போது அந்த வெற்றிடங்களை நிரப்பாமல் இச் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3041/ '12

கௌரவ றோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும், புத்தசாசன, மதஅலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பீ.சீ.சீ. நிறுவனத்திற்கு உரித்தான கொழும்பு 10, சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி காணி எந்த வேலைத்திட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி காணியின் நிலப்பரப்பு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி காணியின் தற்போதைய பெறுமதி எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணியில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிர்மாணிப்புப் பணிகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3102/ '12

கௌரவ பி. ஹரிசன்,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012ஆம் ஆண்டில் அனுராதபுரம் மாவட்டத்தில் மகாவலிப் பிரதேசங்களில் வரட்சி காரணமாக பயிர்ச்செய்கைகள் சேதத்துக்குள்ளாகிய காணிகளின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி பயிர்ச்செய்கைக் காணிகளின் உரிமையாளர்களில் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு இழப்பீடாக வழங்கப்பட்ட மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

(iv) சேதத்துக்குள்ளாகிய வயற்காணிகளுக்காக விதை நெல் வழங்கப்பட்ட வயற்காணிகளின் பரப்பளவு மற்றும் வழங்கப்பட்ட விதை நெல்லின் அளவு தொகுதிவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) பயிர்ச்செய்கை சேதத்தை முன்னிட்டு ஒரு ஏக்கர் காணிக்காக வழங்கப்பட்ட உழவு இயந்திர வாடகை நிவாரணத் தொகை யாதென்பதையும்;

(vi) இதற்கென செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் மகாவலி எச் வலயத்தில் காணப்படும் கமநல அமைப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கமநல அமைப்புகளில் தற்போது ரூபா ஓரிலட்சம் வீதம் வழங்கப்பட்டுள்ள கமநல அமைப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பணத்தைப் பெறாத கமநல அமைப்புகளுக்கு எதிர்வரும் காலத்தில் மேற்படி பணத்தை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மகாவலி பிரதேசங்களிலுள்ள கிணறுகளை புனரமைப்பதற்காக 2012ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

(ii) ஒரு கிணறுக்கென ஒதுக்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1961/ ’11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அங்குணுகொலபெலஸ்ஸ மாவட்ட வைத்தியசாலையில் நிலவுகின்ற கடுமையான பௌதீக மற்றும் மனித வள பற்றாக்குறை காரணமாக பிரதேச மக்கள் பல பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்பதையும்;

(ii) இங்கு சில கட்டிடங்கள் மறுசீரமைக்கப்படாத காரணத்தால் கைவிடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அங்குணுகொலபெலஸ்ஸ மாவட்ட வைத்தியசாலைக்குத் தேவையான வசதிகளைத் துரிதமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) இதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறாயின், வைத்தியசாலையின் மறுசீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வைத்தியசாலையில் நிலவும் ஊழியர் பற்றாக்குறை எவ்வளவு என இனங்காணப்பட்டுள்ளதா;

(ii) அதன் பிரகாரம் ஒவ்வொரு துறையிலுமுள்ள ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் திகதி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2370/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தில் “சேனக பிபிலே ஔடதக் கொள்கை”யை மீண்டும் அமுல்படுத்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வாக்குறுதி வழங்கப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதிலும் இற்றைவரை இக்கொள்கை அமுல்படுத்தப்படாது தாமதமடைந்துள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் மிகவும் அதிகமாக பயன்படுத்தப்படும் மருந்துவகைகளை உள்நாட்டிலியே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக மஹிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளவாறு தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்து வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இம்மருந்து வகைகள் யாவையென்பதையும்;

(iii) உள்நாட்டில் மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்கு வருடாந்தம் செலவிடப்படுகின்ற பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2417/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012.02.11ஆம் திகதி அல்லது அதற்குக் கிட்டிய ஒரு திகதியில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றம் காரணமாக அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ள குறைந்த வருமானம் பெறும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மேற்கொள்ளவுள்ள அல்லது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்த மானியம் வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iv) மேற்படி எரிபொருள் மானியம் வழங்கல் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதி யாதென்பதையும்

அவர்குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறைந்த வருமானம் பெறும் தோட்டத்தொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படாதெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) பொருளாதார ரீதியில் மிகவும் அடி மட்டத்திலுள்ள, மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வது ஒரு கனவாகவே இருந்து வரும் இவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படாமையானது மாபெரும் அநீதியென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2899/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள மீனைத் தகரத்திலடைக்கும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையையும்;

(ii) அவை எப்போது ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(iii) தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு முந்திய 5 வருடங்களில் இறக்குமதி செய்யப்பட்ட தகரத்திலடைக்கப்பட்ட மீனின் அளவையும்;

(iv) தொழிற்சாலைகள் ஆரம்பித்ததன் பின்னர், இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்ட தகரத்திலடைக்கப்பட்ட மீனின் அளவை வருடவாரியாகவும்;

(v) மேற்படி இறக்குமதியின் பெறுமதியை இலங்கை ரூபாவிலும்;

(vi) உள்ளூரில் தகரத்திலடைக்கும் தொழிற்சாலைகள் ஆரம்பித்ததன் காரணமாக சேமிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் அளவையும்;

(vii) அவ்வாறான சேமிப்புக்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3103/ '12

கௌரவ பி.ஹரிசன்,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அனுராதபுரம் நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் காணப்படும்,

(i) மக்கள் வசிக்கும் காணித் துண்டுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் அறுதி உறுதிக் காணித் துண்டுகள், குத்தகை காணித் துண்டுகள் மற்றும் அனுமதியற்ற காணித் துண்டுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை காணிபெறுநர்களுக்கு அறுதி உறுதிகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அனுராதபுரம் நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் வசிக்கும் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் அப்புறப்படுத்தப்படுவார்களா என்பதையும்;

(ii) இன்றேல், இவர்களின் வதிவு அதே இடங்களிலேயே சட்டரீதியாக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற குடியிருப்பாளர்களிடமிருந்து ஆதன வரி அல்லது வேறேதேனும் வரி அறவிடப்படுமா என்பதையும்;

(iv) மின்சார மற்றும் ஏனைய வசதிகளை வழங்கும் போது இவர்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக பரிசோதிக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1962/ '11

கௌரவ புத்திக பத்திரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் படி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் சுமார் ரூபா 6400 மில்லியன் மோசடி இடம்பெற்றுள்ளதென்பதையும்;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட வாகன பிரதான பாகங்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட வாகனங்களுக்கு தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களின் இலக்கங்களை இடுவதன் மூலம் மேற்படி மோசடி நடைபெறுகின்றதென்பதையும்;

(iii) இதனால் அரசாங்கம் பெருமளவு வருமானத்தை இழக்கின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி மோசடி சம்பந்தமாக முறைசார்ந்த விசாரணையை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2371/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தலசீமியா நோய் பரவியுள்ள மாவட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை அறிக்கையிடப்பட்டுள்ள தலசீமியா நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை வருடாந்த ரீதியில் வெவ்வெறாக எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது தலசீமியா நோய் பரவியுள்ள மாவட்டங்களில் வாழுகின்ற மொத்த தலசீமியா நோயாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அதிகமான தலசீமியா நோயாளிகளைக் கொண்டதும் இதனால் அதிகமான மரணங்கள் சம்பவித்துள்ளதுமான மாவட்டம் யாதென்பதையும்;

(v) மேற்படி மரணங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) அந்த மாவட்டத்திலுள்ள தலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தலசீமியா நோய்க்கு நிரந்தரமான சிகிச்சைமுறை உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த முறை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) தலசீமியா நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்ற ஊசி மருந்து யாதென்பதையும்;

(iv) இம்மருந்து எந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது என்பதையும்;

(v) ஊசிமருந்து இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2488/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் ஒயாமடுவ பிரதேசத்தில் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற 'தயட்ட கிருல' கண்காட்சியின் கீழ்,

(i) அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள பௌத்த விகாரைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட விகாரைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இந்த ஒவ்வொரு விகாரைக்கும் வழங்கப்பட்ட பணத்தொகை மற்றும் அனைத்து விகாரைகளுக்குமாக வழங்கப்பட்ட மொத்தப் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) சீர்திருத்தங்களுக்கு உட்படுத்தப்படாத விகாரைகளின் எண்ணிக்கை யாது என்பதையும் ;

(v) இவ் விகாரைகள் சீர்திருத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2900/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகத்தின் மீது ஈரான் எண்ணெய் பொருளாதாரத் தடை எப்பொழுது விதிக்கப்பட்டதென்பதையும்;

(ii) இலங்கையும் சொல்லப்பட்ட பொருளாதாரத் தடையால் கட்டுப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கடந்த மூன்று வருடங்களிலும் இவ்வாண்டில் தடை விதிக்கப்பட்ட திகதியிலிருந்து இற்றை வரையும் ஈரானிய எண்ணெய் நுகர்வு மற்றும் ஈரானிய மசகு எண்ணெய் இறக்குமதியின் அளவை மெட்ரிக் தொன்களில் வருடாந்த அடிப்படையிலும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) எவ்வாறு இலங்கை ஈரானிய எண்ணெய் இறக்குமதியை மாற்றீடு செய்கின்றதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட பொருளாதாரத் தடைக்கு பின்னர் எந்த நாட்டிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டதென்பதையும்;

(iii) ஈரான் மீது ஐரோப்பியர்களால் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டதன் பின்னர் ஈரானிலிருந்து மட்டுப்படுத்தப்பட்டளவிலான எண்ணெய் இறக்குமதிகளுக்காக செலுத்தப்படவேண்டியிருந்த அதிகரிக்கப்பட்ட மேலதிகமிகை கட்டணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2013 பெப்புருவரி 22, வெள்ளிக்கிழமை)

1632/ '11

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (7)

(அ) (i) 1841 ஆம் ஆண்டின் அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தின் கீழ் 2001 ஆம் வருடம் முதல் இற்றை வரை கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுள் இன்றும் சிறையில் அல்லது வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களது எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'திருத்த முடியாத போக்கிரி' (Incorrigible rogues) என்பதன் அர்த்தம் என்னவென்பதையும்;

(ii) அச்சொல் எந்நோக்கத்தின் அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள், அது அவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டும் போன்றன தொடர்பாக 2004 ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்குறிப்பிடப்பட்ட விதப்புரைகளை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறு இல்லையெனில், அக்கட்டளைச்சட்டத்தின் கீழான நடைமுறைகள் சீர்செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்படவுள்ள ஏனைய நடைமுறைகள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2303/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1990ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் டெங்கு நோய் தொற்று, வாகன விபத்துகள், தற்கொலை, உணவு நஞ்சாகுதல், உடல் அல்லது உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகுதல் ஆகிய காரணங்களால் வருடாந்தம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட அல்லது மரணமடைந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையும், அவர்கள் கல்வி பயின்ற பாடசாலைகளும் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) கடந்த வருடத்தில் பல்வேறு தவறுகளுக்காக குற்றஞ்சுமத்தப்பட்டு சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை, பிள்ளையின் வயதெல்லை மற்றும் பாடசாலைக்கு ஏற்ப தனித்தனியே யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2416/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை நாடு பூராவும் வீதிகளை நிர்மாணிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள்;

(ii) இந்த ஒவ்வொரு நிறுவனத்துக்கும் ஒப்பந்தங்களாக வழங்கப்பட்டுள்ள வீதிகள்

வெவ்வேறாக யாவை என அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வீதிக்குமான மதிப்பிடப்பட்ட பணத்தொகை மற்றும் வேலை முடிவுறும்போது செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட பின்பு இந்த ஒவ்வொரு வீதியினதும் வேலைகளுக்கென செலுத்தப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) ஒவ்வொரு வீதியினதும் நிர்மாணிப்புக்காக இதுவரை செலுத்த வேண்டியுள்ள நிலுவைப் பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) இவ்வீதிகளை நிர்மாணித்த ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள மொத்த நிலுவைப் பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இதுவரை வேலை முடிவுற்றுள்ள ஒப்பந்தங்களுக்கான மொத்தப் பணத்தொகையும் செலுத்தப்படாவின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2572/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாண சபைகள் முறை ஆரம்பமாகிய திகதி தொடக்கம் இற்றைவரை ஒவ்வொரு மாகாண சபையிலும் பதிவாகியுள்ள பெண்கள் பிரதிநிதித்துவம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) இயங்கிக்கொண்டுள்ள சகல மாகாண சபைகளிலும் உள்ள பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது ஒட்டுமொத்த மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எவ்வளவு சதவீதமென்பதையும்;

(iii) மாகாண சபைகளில் தற்போது காணப்படுகின்றதான பெண்களின் பிரதிநிதித்துவம் போதுமான மட்டத்தில் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2864/ '12

கௌரவ எம். ரீ. ஹசன் அலி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு மாநகர சபையின் ஓய்வுபெற்ற உதவி காய்ச்சியொட்டுநர் திரு. ஏ.எச்.எம். மஹ்ரூப்பின் முறைப்பாட்டுக்கு ஏற்புடையதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கொழும்பு மாநகர சபைக்கு செய்துள்ள விதப்புரை நடைமுறைப்படுத்தப்படுவதன் முன்னேற்றம் தொடர்பாக, உள்ளூராட்சி ஆணையாளர் (மே.மா) LGD/09/01/10ஆம் இலக்க, 2012.02.29ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நகர ஆணையாளரிடம் வினவியுள்ளார் என்பதையும்;

(ii) 2012.05.14 மற்றும் 2012.05.31ஆம் திகதிய கடிதங்களின் மூலம் தொடர்ந்தும் அது தொடர்பில் நினைவூட்டப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) 17/2005ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாகச் செயலாற்றுகின்ற கொழும்பு மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் மேற்படி அ(i) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள விதப்புரையை நடைமுறைப்படுத்த இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு. மஹ்ரூப்பிற்கு விதந்துரைக்கப்பட்ட நிவாரணங்கள் வழங்கப்படுவதை தாமதப்படுத்திய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2905/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுதந்திரம் பெற்றதிலிருந்து இற்றைவரை இலங்கையை மாறி மாறி ஆட்செய்துகொண்டு வருகின்ற அரசாங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்படும் ஒவ்வொரு அரசாங்கத்தினதும் அமைச்சரவையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக ஆரம்பம் முதல் முடிவு வரை எத்தனை என்பதையும்;

(ii) 1985, 1995, 2005 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு அமைச்சருக்குமான சராசரிச் செலவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மாகாண சபைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளவாறு அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை சட்டத்தின் மூலம் ஏன் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதையும்;

(ii) அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பு நாட்டுக்கு உதவியுள்ளதா அல்லது நாட்டின் மீது மேலும் சுமையைச் சுமத்தியுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3008/ '12

கௌரவ மொஹமட் அஸ்லம்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முஸ்லிம் சமய மற்றும் கலாசாரஅலுவல்கள் பற்றிய திணைக்களத்தின் R/1566/G/51 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள காலி, மிலித்தூவ, எச்.கே. எட்மன்ட் வீதியில், ஆதன வரி இலக்கம் 113 இல் அமைந்துள்ள மஸ்ஜித் முஹியித்தீன் தைக்கா பள்ளி வாசலுக்குச் சொந்தமான (வக்குப் ஆதனம் ) வீடுகள் மற்றும் கடைகளை வாடகை அடிப்படையில் அல்லது வேறு விதத்தில் பயன்படுத்துவோர் முஸ்லிம் பள்ளி வாசல்கள் மற்றும் புனித நம்பிக்கை பொறுப்புகள் சட்டத்துடன் சம்பந்தப்பட்ட வர்த்தமானக் கட்டளைகளுக்கேற்ப ஏற்புடைய சட்டரீதியான குத்தகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ள திகதியை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி வக்குப் ஆதனங்களில் வதிவோர் அல்லது அவற்றை பயன்படுத்துவோர் சம்பந்தப்பட்ட வர்த்தமானக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் தற்போதைய பெறுமதி மதிப்பீட்டின் படி நிலுவையாகவுள்ள தவணைப் பணம் உட்பட குத்தகைப் பணத்தை செலுத்தாமல் மேற்படி ஆதனங்களை தனிப்பட்ட உடமைகளாக்கிக் கொள்வதற்கு முயற்சிப்பதால் அவர்களை மேற்படி ஆதனங்களிலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2573/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாண சபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் இற்றைவரை அந்த ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களையும் பிரதிநிதித்துவம் செய்த பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) பெண் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அனைத்து உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(iii) பொது மக்களுக்கு மிகவும் நெருங்கிய மக்கள் பிரதிநிதித்துவ துறையான உள்ளூராட்சி மன்றங்களில் திருப்தியடையக்கூடியளவு பெண்கள் பிரதிநிதித்துவம் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2866/ '12

கௌரவ எம். ரீ. ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் கஹட்டகஹமட, சியம்பலாகஸ்கொட்டுவவில் வசிக்கும் திருமதி எஸ்.எச்.எம். பாத்திமா கிரி/தலுபொத்தகம கனிஷ்ட வித்தியாலயத்தில் 2002.02.01ஆம் திகதியிலிருந்து தொண்டர் ஆசிரியையாக சேவையாற்றுகின்றார் என்பதையும்;

(ii) அதன் பிரகாரம் ஆசிரிய உதவியாளர் நியமனத்தைப் பெறுவதற்கு உரித்துடைய திருமதி பாத்திமா வடமேல் மாகாண முதலமைச்சரும் கல்வியமைச்சருமானவரின் செயலாளரினால் வ/முஅசெ/ஆ13/3/4 ஆம் இலக்க, 2009.08.17 ஆம் திகதிய கடிதம் மூலம் மேற்படி நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு தொடர்பு இலக்கம் 11 இன் கீழ் அழைக்கப்பட்ட போதிலும் இதுவரை மேற்படி ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 2009 ஆகஸ்ட் மாதத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் திருமதி பாத்திமாவுக்கு உரித்துடைய ஆசிரிய உதவியாளர் நியமனத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2579/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமாகாணத்தில் யுத்தத்தினால் அழிவடைந்துள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அழிவடைந்த வீடுகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி வீடுகளை மீள நிர்மாணிக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தின் அனுசரனையின் கீழ் வழங்கப்படுகின்ற நிவாரணங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(v) வட மாகாணத்தில் அழிவடைந்துள்ள அனைத்து வீடுகளையும் நிர்மாணித்து முடிப்பதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?